අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி, உயர்கல்வி தொழிற் கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational Education

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயல்திறன் அறிக்கை
# Annual Performance Report
# 2025




## වෙළුම II - උසස් අධ්‍යාපනය
## இதழ் II - உயர் கல்வி
## Volume II - Higher Education

# வருடாந்த செயற்சாதனை அறிக்கை

# 2025

**கல்வி அமைச்சு**

# உள்ளடக்கம்


1 அத்தியாயம் – தாபன பக்கத்தோற்றம் / அமுல்படுத்தும் சுருக்கம் ........................................1

1.1 உயர் கல்விப் பிரிவு தொடர்பான அறிமுகம் .............. **நுசசழச! டீழழமஅயசம ழெவ னநகறைெநன.**

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, நோக்கம் ........................................1

1.3 உயர் கல்விப் பிரிவின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு........................................1

1.4 ஒழுங்கமைப்புக் குறிப்பு ........................................2

1.4.1 உயர் கல்வித்துறையின் பணியாளர் சபை - 2025.12.31 ஆம் திகதியன்று........................................3

1.5 துறைசார் செயற்சாதனை ........................................4

1.5.1 நிருவாகப் பிரிவு ........................................4

1.5.2. நிதி முகாமைத்துவப் பிரிவு ........................................6

1.5.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு ........................................7

1.5.4. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பிரிவு ........................................8

1.5.5. அபிவிருத்திப் பிரிவு ........................................9

1.5.6. திட்டமில் பிரிவு ........................................11

1.5.7. அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு ........................................13

1.6. உயர் கல்வி நிதி முன்னேற்றங்கள் - 2025........................................14

1.7 வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவியின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டம் ........................................14

02. அத்தியாயம் - முன்னேற்றம் ........................................20

2. 1. துறைசார் முன்னேற்றம் ........................................20

2.1.1. நிருவாகப் பிரிவு ........................................20

2.1.2. கணக்குப் பிரிவு ........................................25

2.1.3. பெறுகைப் பிரிவு ........................................29

2.1.4. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பிரிவு ........................................30

2.1.5. அபிவிருத்திப் பிரிவு ........................................31

2.1.6. வெளிநாட்டு கல்விப் பிரிவு ........................................35

2.1.7. திட்டமிடல் பிரிவு ........................................44

2.1.8. அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு ........................................46

2.1.9. வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம் ........................................52

03. அத்தியவசியாகும் - 2025.12.31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த செயறசாதனை ..................57

3.1 நிதி செயற்சாதனை வெளிப்பாடு ........................................57

3.2 நிதி நிலமை தொடர்பான வெளிப்பாடு ........................................59

3.3 நிதி நிலமை வெளிப்பாடு ........................................61

3.4. ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டினை பயன்படுத்தும் செயற்சாதனை ........................................65

3.5. 2025.12.31 ஆம் திகதியன்று மூலதன செலவின சுருக்கம் ........................................65

04. அத்தியாயம் - செயற்சாதனை சுட்டி ........................................67

4.1 நிறுவனத்தின் செயற்சாதனை சுட்டி (செயற்பாட்டுத திட்டங்ககளின் அடிப்படையில்)..............................67

05 அத்தியாயம் - நிலையான அபவிருத்தி (SDG) நிவர்த்தி செய்வதற்காக செயற்சாதனை ..........................68

5.1 அடையாள காணப்பட்ட உரிய நிலையான நோக்கத்தினை குறிப்பிடவும்.. ..................................................68

5.2 நிரந்தர அபிவிருத்தி இலக்கினை நிவர்த்தி செய்யும் சவால் வெற்றிகள் மற்றும் சவாலை சுருக்கமாக குறிப்பிடவும். ..............................................................................................................................................70

06 அத்தியாயம் - மானிட வள பக்கத்தோற்றம் ..........................................................................................72

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் ....................................................................................................72

6.3 மானிட வள முகாமைத்துவ அபிவிருத்தி ..............................................................................................72

07 அத்தியாயம் – ஒப்பீட்டு அறிக்கை .........................................................................................................78-90

# 1 அத்தியாயம் – தாபன பக்கத்தோற்றம் / அமுல்படுத்தும் சுருக்கம்

## 1.1 உயர் கல்வி துறை தொடர்பான அறிமுகம்

அனைத்து பல்கலைக்கழகங்கள் மூலமும் மாணவர்கள் தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன உலகில் புதிய அறிவுடன் தொடர்புபடுத்துவதற்கும், 21 ஆம் நூற்றாண்டில் எதிர்வரும் தசாப்தத்திற்குள் பொருளாதார ரீதியில் கோரப்படும் மானிட மூலதனத்தினை அதன் ஊடாக கட்டியெழுப்புவதற்கும் நாட்டின் உயர் கல்வி முறைமையின் ஊடாக பாரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு தேசம் மாத்திரமன்று உலக சவாலினை எதிர்கொண்டு தொடர்ந்தும் முன்னேறிச் செல்லும் போது ஆரம்பத்தில், இடைநிலை, மற்றும் மூன்றாம் நிலை கல்வி உயர்கல்வி முறைமையின் அபிவிருத்தியிற்காக எதிர்காலத் திட்டங்களை கட்டியெழுப்புவதற்கு அனைத்து தரப்பினர்களின் கூட்டு உதவிகள் அத்தியவசிய முக்கியத்துவமிக்கதாகும். இதன் கீழ் உயர் கல்வித்துறையின் வினைத்திறன் மற்றும் விளைத்தித்திறனை மேம்படுத்தல், பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், பட்டதாரிகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துதல் போன்றவற்றின் மூலம் பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பினை அதிகரித்தல், ஆராய்ச்சிகள் மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்தல் போன்ற பிரிவுகளுக்காக பங்களிப்பு வழங்குவது வரை உயர் கல்வி அமைச்சின் செயற்பாடுகள் விரிவடைந்து காணப்படுகின்றன.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிகள், நோக்கம்

**நோக்கு**

இலங்கையின் உயர்கல்வி தொடர்பான அதிசிறந்த சர்வதேச மத்திய நிலையமாக மாற்றியமைத்தல்.

**பணிக்கூற்று**

பெறுபேறுகளை நோக்குகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை மற்றும் மூலோபாயத்தினை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதன் மூலம் இலங்கையின் உயர்கல்வி முறைமையில் மாணவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களை திருப்திப்படுத்தல்.

**நோக்கம்**

- உயர் கல்வியிற்கு போதியளவு பிரவேச வாய்ப்பினை வழங்குதல்.
- உயரிய உலக பரிமாணச் சுட்டி கொண்ட மாற்றங்கள் மற்றும் புதிய பல்கலைக்கழகத்தினை தாபித்தல்.
- பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பண்புசார் தரத்தினை விருத்தி செய்தல்.
- ஆராய்ச்சி, வெளியீடு மற்றும் வர்த்தகமயத்தினை விருத்தி செய்தல்.
- உயர் கல்வித்துறையின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தல்.

## 1.3 உயர் கல்வித்துறையின் அமைப்பு கட்டமைப்பு

உயர் கல்வித்துறையின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு தொடர்பாக கருத்திற் கொள்ளும் போது அமைச்சின் கீழ் உள்ள பிரதான நிஞுறுவனமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் நேரடி மேற்பார்வையின் கீழ் 17 பல்கலைக்கழகங்களில் மற்றும் (சம்பிரதாய 16 பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை திறந்த பல்ககழைக்கழகமும் இதில் அடங்குகின்றது) 19 உயர் கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன. அத்துடன் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைகழகம் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLIATE) செயற்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஏ பிரிவின் கீழ் உரிய பட்டத்தினை வழங்குவது தொடர்பில் உயர் கல்வியினை ஊக்குவிக்கும் பணிகள் மற்றும் பட்டம் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 31 நிறுவனங்கள் காணப்படுகின்றன.

## 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 1.4.1 உயர் கல்வித்துறையின் பணியாளர் சபை - 2025.12.31 ஆம் திகதியன்று.

| | ஊழியர் எண்ணிக்கை | புதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உண்மையான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் / மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட | மேலதிக செயலாள் (நிருவாகம் மற்றும் நிதி) | 1 | 1 | - |
| | | மேலதிக செயலாாள் (அபிவிருத்தி மற்றும் புலமைப்பரிசில்) இ. நி. சே | 1 | 1 | - |
| | | மேலதிக செயலாாள் (அரச சார்பற்ற உயர்கல்வி) இ. நி. சே | 1 | 1 | - |
| | | புணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) | 1 | 0 | 1 |
| | | பிரதம நிதி உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| | | பிரதம கணக்காளர் | 1 | 1 | - |
| | | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | - |
| | | சிரேஷ் உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| | | புணிப்பாளர் (வெளிநாட்டுக் கல்வி) | 1 | 1 | - |
| | | பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர் கல்வி) | 1 | 1 | - |
| | | பணிப்பாாள் (அபிவிருத்தி) | 1 | 1 | - |
| | | புணிப்பாளர் (மாணவர் கடன பிரிவு) | 1 | 0 | 1 |
| | | பணிப்பாளர் (திட்டமிடல்) * | 1 | 1 | - |
| | | புணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) | 1 | 1 | - |
| | | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) ** | 1 | 1 | - |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் புலமைப்பரிசில் / திறமை அபிவிருத்தி) | 2 | 2 | - |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவி பணிப்பாளர் (அரச சார்பற்ற உயர் கல்வி) | 1 | 1 | - |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( மாணவர் கடன் பரிவு) - இ. நி. சே. | 1 | 1 | - |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இ. தி. சே. | 2 | 1 | 1 |
| | | பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் ( மாணவர் கடன் பிரிவு ) - இ. தி. சே. | 1 | 1 | - |
| | | உதவிச் செயலாளர் (இ. நி. சே,) | 2 | 1 | 1 |
| | | கணக்காளர் | 1 | 1 | - |
| | | சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | - |

*1.1 அட்டவணை*

| | ஊழியர் வகை | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றி / மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (ii) | மூன்றாம் | நிருவாக உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| | | மொழி பெயர்ப்பாளர் | 2 | 1 | 1 |
| | | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 2 | 1 | 1* |
| (iii) | இடைநிலை | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 115 | 103 | 12* |
| | | தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர் | 2 | 0 | 2 |
| | | ஊடக உத்தியோகத்தர் *** | 1 | 1 | 0 |
| | | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| | | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 31 | 16 | 15 |
| | | முகாமைத்துவ உதவியாளர் *** | 5 | 5 | 0 |
| (iv) | ஆரம்பம் | சாரதி | 21 | 16 | 5 |
| | | சாரதி *** | 1 | 1 | 0 |
| | | அலுவலக பணி உதவியாளர் | 20 | 17 | 3* |
| | | அலுவலக உதவியாளர் *** | 2 | 2 | 0 |
| மொத்தம் | | | **230** | **185** | **45** |

*1.2 அட்டவணை*

**குறிப்ப :-**

*** பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்0 பதவியில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் முழு நேரம் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியில் கடமையினை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.**

**** பிரதிப் பணிப்பாளர் (தகவவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்) பதவியில் சேவையாற்ற வேண்டிய உத்தியோகத்தர் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்) பதவியில் முழு நேரம் கடமையினை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.**

***** திணைக்களமயப் பதவிகள்.**

- **இவ் உத்தியோகத்தர்கள் பொ.நி.சு. 14/2022 இன் கீழ் வெளிநாடு சென்றுள்ளதுடன் பொ.நி.சு. 14/2022 (iv) இற்கமைய இப் பதவிகள் வெற்றிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

## 1.5 துறைசார் செயற்சாதனை

### 1.5.1 நிருவாகப் பிரிவு

உயர் கல்வியினை மேம்படுத்தும் வகையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் முன்னெடுப்பதற்காக அமைச்சின் நோக்கு மற்றும் பணிகளுக்கு பொருத்தமான உயர் தரத்தினைக் கொண்ட அதி உயரிய ஊழியர் சபையினை பேனுதல், தொடர்ச்சியான மற்றும் பயன்மிக்க முறையில் சேவை வழங்கள், ஏனைய நிறுவனங்களுடன் முறையான இணைப்பினை ஏற்படுத்துவது, பணியாளர் சபையின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தல் மற்றும் உயர் கல்வித்துறையின் முழுமையான நிருவாகம், செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக நிருவாகப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### 1.5.1.1. நிருவாகப் பிரிவின் செயற்பாடுகள்

- நாளாந்தம் உயர் கலவிப் பரிவிற்கு கிடைக்கும் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் சாதகமான நிலமைகளை உறுதிப்படுத்தல்.
- அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை அமைச்சரவைக்கு சமர்பித்தல் மற்றும் தீர்மானத்தினை உரிய தரப்பிபனருக்கு அறிவித்தல்.
- ஏனைய அமைச்சுக்களினால் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக மேற்பார்வைகளை வழங்குதல்.
- பாரளுமன்ற கேள்விகள், அலோசனை செயற்குழ யோசனை, பொது மக்கள் மனு, மானித உரிமையினை மீறுதல் மற்றும் ஜனாதிபதி அலுலவலகம் மற்றும் பல்வேறுபட்ட தரப்பினர்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள், யோசனைகள் மற்றும் கோரிக்கைகளை உரிய தரப்பினருக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- உயர் கல்வியின் செயற்பாடுகளுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்குதல்
- உயர் கல்வித்துறையின் அனைத்து வாகனங்களையும் பதிவு செய்தல், பராமரிப்பு செய்தல் மற்றும் காப்புறுதி, வருமான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அனைத்து குழாம் வாகனங்களுக்காக எரிபொருள் வழங்கள்.
- உயர் கல்வித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்கவாறு வழங்குதல், கட்டடங்கள், இயந்திரோபகரணங்கள் மற்றும் பராமரிப்பு தொடர்பான உரிய நிறுவனங்களிடமிருந்து சேவையினைப் பெற்றுக் கொள்ளலவ் பேனுதல்.
   - உயர் கலவியித்துறையின் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் சுத்தப்படுத்தல் செயற்பாடுகளை உரியவாறு முன்னெடுத்தல்.
- உத்தியோகத்தர்களின் கடமைபெருட்டு தொலைபெசி கட்டண பட்டியலை தீர்த்தல்.
- உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு சுற்றுலா தொடர்பில் வெளிநாட்டு கடவுச் சீட்டு. வீசா, VIP, பிரயாணச் செலவினம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான செயற்பாடுகள் மற்றும் நாட்டில் இருந்து புறப்பட்டு செல்வது தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களறின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு உரிய தினத்திற்கு பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.
- உத்தியோகத்தர்களின் விடுமுறை. மேலதிக நேரம் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் தொடர்பிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- உத்தியோகத்தர்களுக்காக இடர் கடன், சொத்துக்க கடன், முச்சக்கர வண்டிக் கடன், விழா முற்பணக் கடனைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக செயற்பாடுகளள் மற்றும் அக்ரஹார காப்புறுதி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- மாதாந்த புகையிரத தவணை அனுமதிச்சீட்டு மற்றும் புகையிரத போக்குவரத்து அனுமதிபத்திரம் ( warrants) வழங்குதல்.
- தேர்தல் நடைபெறும் சந்தர்பங்களில் அவற்றுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளின் இணைப்புப் பணிகளை மேற்கொள்ல்.
- உயர் கல்வித்துறையின் பணியாளர் சபையினை சேர்த்துக் கொள்ளல், இணைப்பு செய்தல், இடமாற்றம் செய்தல், பதிவு உயர்வு மற்றும் ஓய்வு பெறல்.

- உயர் கல்வி கௌரவ அமைச்சர் / இராஜாங்க அமைச்சர் / பிரதி அமைச்சர் பணியாளர் சபையினை சேர்த்துக் கொள்ளல், இணைப்பு செய்தல் மற்றும் சேவையினை முடிவுறுத்தல்.
- ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிமுறைகளை வகுத்தல்.
- ஊழியர்களுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்றுவிப்பு வாய்ப்பினை வழங்குதல்.
- உயர் கல்வித்துறையின் கீழ் காணப்படும் நிறுவனங்களில் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வித்துறையின் கல்விசார் மற்றும் கல்விசார ஊழயர்களுக்காக சலுகை அடிப்படையில் சலுகை அடிப்படையில் மோட்டார் அனுமதிப்பத்திரத்தனை வழங்குதல்.
- பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்விசார பணியாாள் சபையினை நியமிதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல்.
- பல்கலைக்கழகங்களுக்காக வெளிநாட்டு விரிவுரையாளர்களை ஒப்பந்த / தற்காலிக அடிப்படைக்கு அமைய சேர்த்துக் கொள்ளவதற்காக அங்கீகாரத்தினை வழங்குதல்.
- பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களை இடைநிலை அடிப்படையில் தற்காலிக / நிரந்தரமாக விடுவித்தல்.
- பல்கலைக்கழக முறைமையில் கொடுப்பனவுகள் தொடர்பிலான பொதுத்திறைசேரி மற்றும் இணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக அமைச்சின் பரிந்துரையினை வழங்குதல்.
- வெளிநாட்டு உதவி மற்றும் கடனிற்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக ஊழியர்களை அங்கீகரித்தல் மற்றும் ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

### 1.5.2. நிதி முகாமைத்துவப் பிரிவு

நிதி ஒழுங்குக் கோவையினால் பணிக்கப்பட்டுள்ளவாறு அமைச்சு மற்றும் அதன் கீழ் திணைக்களங்களின் நிதி நிருவாகத்தின் முறைகள் தன்மை மற்றுமு் அளவியல் ரீதியிலான நிலமைகள் தொடர்பாக அமைச்சின் செயலாளர் பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தராக நிதி அமைச்சருக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இதற்கு அமைய அமைச்சின் நிதிக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குக் கோவைகளை அமுல்படுத்தல் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தொடர்பில் அமைமச்சின் செயலாளர் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டிய விடயங்கள் தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு உதவிகளை வழங்குவது நிதி முகாமைத்துவ பரிவின் பிரதான பணியாகும்.

வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் நிதி முகாமைத்துவ முறைமையினை அமுல்படுத்தல், நிதி ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள், நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவு, கணக்கீட்டு மற்றும் அறிக்கைப்படுத்தல், உள்ளக நிருவாகம், சொத்து முகாமைத்துவம், பெறுகை முகாமைத்துவம், வெளிநாட்டு உதவி செயற்திட்டம் தொடர்பில் நிதி முகாமைத்துவ ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வை மற்றும் பணிகள் அரச அறிவிப்பு இலங்கை கணக்கியல் சேவைப் பிரமானக் குறிப்பின் மூலம் பணிக்கப்பட்டுள்ள செயற்பாடாகும்.

## 2025.12.31 ஆம் திகதியன்று மீண்டெழும் செலவினத்தின் சுருக்கம்

| வகை / விபரங்கள் | 2025 தேறிய ஒதக்கீடுகள் | ஒதுக்கீடு | | ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | செலவினம் | எஞ்சியது | வீதம் % |
| நிருவாக மற்றும் தாபன சேவைக் | 3,138 | 2,239 | 899 | 71% |
| தனிநபர் சம்பளம் | 175 | 174 | 1 | 100% |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 2964 | 2,065 | 899 | 70% |
| உயர் கல்வியின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்வதற்கு தாபனப் பங்களிப்புக்கள் | 2,483 | 2,445 | 37 | 98% |
| மொத்தம் | 5,621 | 4,684 | 937 | 83% |

*1.3 அட்டவணை*

### 1.5.3 உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவு

### 2025.01.01 தொடக்கம் 2025.12.31 வரை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

- பெறுகைப் பணிகள் 2024 பெறுகை பணிகள் கோவை, வழிகாட்டல் ஆலோசனைக் கோவை, நிதி ஒழுங்குக் கோவை மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கு உரிய வரவு செலவு ஒதுக்கீட்டுக்கு அமைய மேற்கொள்ளல்.
- பெறுகைத் திட்டங்களுக்கு அமைய மற்றும் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு அமைய வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனிற்கு உரியதான சேவைகளை வழங்குதல்.
- அரச பல்கலைக்கழகங்களுக்கு உரியதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பபட்டு அனுப்பப்படும் செயற்திட்ட யோசனை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கின்றேன்.
- இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலிப்பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் ஆகிய நிறுவனங்களினால் கிடைக்கும் செயற்திட்ட யோசனைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கான சமர்பித்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த செயற்திட்ட யோசனை அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்பிப்பதற்கு தேவையான அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை தயாரித்தல்.
- செயற்திட்டங்களுக்கு உரியதான கட்டணத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் கிடைக்கும் ஆவணங்கள் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவிற்கு சமர்பித்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அளவுப் பத்திரம் (BOQ) உரிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்புதல்.

**1.5.3.2** சேவைப் பெறுகை தொடர்பில் 2025 ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

**1.** சேவைப் பெறுகை

- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமிப்பதற்காக தேவைாயான அறிவுசார் தொழிலாளர்கள், விஷேட அறிவு கொண்ட நபர்களின் பெயரை அங்கீகாரத்திற்காக சமர்பித்தல்.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவு, அமைச்சின் பிரதான பெறுகைக் குழுக் கூட்டங்களிற்கு தேவையான பெறுகை ஆவணங்களை தயாரித்து வழங்குதல்.
- விலைமனுக் கோரல் குழுவினை நியமித்தல் மற்றும் உரிய தினம், உரிய நேரத்திற்கு விலை மனுவினை திறப்பதற்கு உதவியினை வழங்குதல்.
- விலைமனுவினை ஆவணப்படுத்தி உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்பித்தல்.
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெறுகைக் குழுவிற்கு சமர்பித்து இறுதித் தீர்வினைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்தத்தினை வழங்குதல்.

**2. ஆலோசனை சேவை**

அநேகமான பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் செயற்திட்டங்களின் நிர்மாண செயற்பாடுகளுக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் உரிய நிர்மாணிப்புக்களை ஆரம்பித்தல் மற்றும் முடிவுறுத்துவதற்காக நீண்டகாலம் கடக்கும் வேளையில், அச் செயற்திட்ட காலத்தினைப் போன்று செலவினமும் இரட்டிப்பாகிய சந்தர்ப்பமும் மேற்பார்வை செய்யப்பட்டது. அது தொடர்பாக கண்டறியும் போது ஆலோசகர் ஒருவரை தேர்ந்தெடுக்கும் சிறிய செயற்பாட்டின் போது கூட மிகக் கூடுதலான காலம் கடந்துள்ளது.
அதற்குத் தீர்வாக அமைச்சினால் பல்கலைக்கழக முறைமையில் நிர்மாணிப்புக்களை வகைப்படுத்தி பெறுகை செயற்பாடுகளுக்கு அமைவான யோசனைகள் மற்றும் விலைகளை கோரி பல்கலைக்கழகத்திற்காக அங்கீகரிக்கப்படும் நிர்மாண செயற்திட்டத்திற்காக ஆலோசகர்களின் பட்டியலைத் தாயாரித்து பல்கலைக்கழகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய அவ்வாறான செயற்திட்டத்திற்காக பெறுகை செயற்பாடுகளுக்காக கூடுதலான கால செலவிட்டு பல்லைக்ககைத்திற்காக ஆலோசகர்களை நியமிப்பதற்குப் பதிலாக கூடுதலான காலத்தினை செலவிடாது இப் பட்டியல் ஆலோசகர்களை தோந்தெடுத்து துரிதகதியில் ஆக்க பணிகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ன.

### 1.5.4. தகவல் மற்றும் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பம்

உயர் கல்வித்துறையின் மற்றும் உயர் கல்வித்துறையின் வினைத்திறனை உட்பட விளைத்திறனை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவது இப் பிரிவின் பிரதான நோக்கமாகும். அத்துடன் அரச பல்கலைக்கழக முறைமையின் வினைத்திறன் மற்றுமு் தரத்தினை மேம்படுத்துவதற்காக பயன்படுத்த முடியுமான தகவல் தொழில்நுட்ப ஒதுக்கீடுகளை வகுத்தல் போன்ற செயற்பாடுகள் இப் பிாவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.5.4.1. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்பப் பரிவின் ஊழியர்களினால் 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள்.

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் 17 பல்கலைக்கழகங்கள் மூலம் மற்றும் இணைந்த 18 நிறுவனங்களை கொண்ட அனைத்து கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் வெளிநாட்டு விடுமுறையினை அங்கீகரித்தல், இணைய வழி மூலம் வெளிநாட்டு விடுமுறையினை அங்கீரித்தல் (online foreign leave approval) முறைமை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
- வெளிநாட்டு புலமைப்பரிசிலிற்காக விண்ணப்பம் கோரும் முறைகள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்வதற்கு தேவையான முறைமை (online management system for scholarships) வகுக்கப்பட்டுள்ளதுடன் புலமைப்பரிசில் விண்ணப்பதாரர்களுக்கு இதன் ஊடாக புலமைப்பரிசிலிற்காக விண்ணப்பிப்பதற்கு முடியும். அதற்கு அமைய நேர்முகப்பரீடசையினை மேற்கொள்ளல் Zoom தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- அரச சார்பற்ற பல்கலைக்கழக பிரிவின் Online Interest Free Student Loan Management System முறைமையினை பராமரித்தல் மற்றும் புதிய தேவைகளை உள்ளடக்குவதற்கு உரியதான செயற்பாடுகளை இணைப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், Ms Teams தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அமைச்சின் மாணவர் கடன் பிரிவின் மூலம் 4,500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நேர்முகப்ப பரீட்சைக்காக தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- மேலும், 2016 வரவு செலவு யோசனைக்கு அமைய, மடிக் கணனி கொள்வனவிற்காக வட்டியற்ற கடன் வழங்கும் செயற்திட்டத்திற்கு உரியதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு (Vehicle Permit) முறைமை வகுக்கப்பட்டுள்ளது.

- மேற்கூறப்பட்ட முறைமை புதிய தேவைகளுக்கு அமைய மிகுந்த பயன்மிக்கதாக பயன்படுத்துவதற்காக சமகாலப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது.

- புதிய தேவைகளுக்கு பொருத்தமானவாறு உயர் கல்வித்துறையின் வலயமைப்பு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- உயர் கல்வித்துறையின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி அமர்வினை அமுல்படுத்தல்.

- உயர் கல்வித்துறையின் தேவைகளுக்கு ஏற்றவாறு புதிய தகவல் தொழில்நுட்ப முறைமையினை உருவாக்குதல்.

### 1.5.5. அபிவிருத்திப் பிரிவு

இலங்கையில் புதிய அரச பல்கலைக்கழங்களை தாபித்தல், காணப்படும் பல்கலைக்கழகங்களை விரிவுபடுத்தும் போது தேவையான சட்டரீதியிலான பின்னனியினை வகுத்தல் மற்றும் காணியினை சுவீகரிப்பதன் மூலம் பௌதீக வளத்தினை வழங்குவது இப் பிரிவின் பொறுப்பாகும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் மேற்பார்வை செய்யப்படாத பிக்கு பல்கலைக்கழகம், பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் ஆகியவற்றின் சட்ட ஒழுங்குகளிற்கு உரியதான பணிகள் மேற்கொள்ளப்படுவது இப் பிரிவின் மூலமாகும். பல்கலைல்கழக கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் கல்வி செயற்பாடுகள், கடமை மற்றும் தனியார் செயறபாடுகளுக்காக வெளிநாடு செல்லும் போது அதற்காக நாட்டில் இருந்து வெளிச் செல்வதற்கு தேவையான அங்கீகாரத்தினை வழங்குதல், பல்கலைக்கழகங்களின் கல்விசார் செயற்பாடுகளுக்கு தேவையான இரசாயணப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது தேவையான பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அப் பணிகளுக்காக வசதிகள் வழங்கப்படுகின்றன.

**உத்தியோகத்தர் எண்ணிக்கை**

| தொடர் இலக்கம் | புதவிப் பெயர் | 2025.01.01 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை | 2025.12.31 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 02. | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 04. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10* | 07** |
| 05. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 1 | 02 | 02 |
| 06. | அலுவலக ஊழியர் சேவை III | 01 | 01 |
| **மொத்தம்** | | **16** | **13** |

*1.4 அட்டவணை*

* 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் ஏற்கனவே ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐந்தாண்டு கால வெளிநாட்டு விடுமுறையினையும் மற்ற உத்தியோகத்தர் ஐந்து வருடகால உள்நாட்டு விடுமுறையினையும் பெற்றுள்ளார்.

** 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 10 அபிவிருத்தியோகத்தர்களினல் ஏற்கனவே இரண்டு உத்தியோகத்தர்கள் மகப்பேற்று விடுமுறை பெற்று சென்றுள்ளதுடன் ஒரு உத்தியோகத்தர் 2025.02.27 ஆம் திகதி இடமாற்றம் பெற்று வந்துள்ளார். 1.5.5.1 அபிவிருத்திப் பிரிவின் செயற்பாடுகள்.

1. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தினால் திருத்தப்படும் செயற்பாடுகள் மற்றும் அச் சட்டத்தின் புதிய பாடநெறியினை ஆரம்பித்தல், பாடநெறியினை மாற்றிமைத்தல், புதிய பீடங்கள் மற்றும் பிரிவுகளை ஆரம்பித்தல் ஆகிய கட்டளைகள் மற்றும் மேற்பார்வையினை மேற்கொள்ளல்.

2. அரச பல்கலைக்கழகங்களை தாபித்தல் மற்றும் விரிவுபடத்தலிற்காக காணி சுவீகரித்தல் மற்றும் பொறுப்பேற்றல் செயற்பாடுகள் தொடர்பான பணிகள்.

3. இலங்கை பிக்கு பல்கலைக்கழக மற்றும் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்திற்கு உரிய செயற்பாடுகள் (ஊழியர் எண்ணிக்கை தொடர்பான பணிகளைத் தவிர)

4. இலங்கை தாதி பல்கலைக்கழகத்தினை தாபிப்பது தொடர்பான பணிகள்.

5. அரச பல்லைக்கழகங்களில் வன்முறைகள் மற்றும் பகிடிவதையினைத் தடுத்தல் மற்றும் ஒழிப்பதற்கான தேசிய செயலணி தொடர்பாக அமைச்சின் பணிகள்.

6. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலிப் பல்கலைக்கழகம், பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் ஏனைய பட்டமளிப்பு கல்வி நிறுவகங்களின் நிருவாக சபை / முகாமைத்தவ சபையின் அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முகாமைத்தவ சபைகளின் நிருவாக சபையினை பிரதிநித்துவப்படுத்துவதற்காக அமைச்சின் பிரதிநிதிகளை நியமித்தல் தொடர்பான பணிகள்.

7. இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் தொடர்பான பணிகள் (ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விடயங்களைத் தவிர)

8. அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அப் பல்கலைக்கழகங்களுக்குரிய பட்டப்பின் படிப்பு பட்ட நிறுவகத்தினால் கிடைக்கும் வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பப்படிவத்திற்காக கௌரவ அமைச்சரின் மற்றும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரியதான பணிகளை மேற்கொள்ளல்.

9. பல்கலைக்கழகங்களின் வேந்தர்கள் மற்றும் உப வேந்தர்களை நியமிப்பது தொடர்பான இணைப்பினை மேற்கொள்ளல் மற்றும் அவர்களின் வெளிநாட்டு விடுமுறை அனுமதிப்பத்திரத்திற்காக கௌரவ ஜனாதியதியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிய செயற்பாடுகள்.

10. பல்கலைக்கழக பணியாளர் சபை உத்தியோகத்தர்களுக்காக அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய விமான அனுமதிப்பத்தரங்களுக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளவதற்கான உரிய செயற்பாடுகள்.

11. பல்கலைக்கழக துறைக்குரிய பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஆவனங்கள் தொடர்பான செயற்பாடுகள்.

12. பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான பொருட்கள், இலத்திரணியல் உபகரண தொகுதிகள் மற்றும் பல்வேறுபட்ட பாகங்கள் விமானம் மூலம் இறக்குமதி செய்வதற்காக அரச நிதி சற்றறிக்கை இலக்கம் 368 இற்கமை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கு உரியதான செயற்பாடுகள்.

13. பல்கலைக்கழகங்களுக்கு தேவையான இரசாயணப் பொருட்கள், இலத்தரணியல் உபகரண தொகுதிகள் மற்றும் பல்வேறுபட்ட பாகங்களை இறக்குமதி செய்யும் போது அவ்வாறான பொருட்களுக்காக தீர்வை வரி மற்றும் வட் வரி விலக்களிப்பு / நிவாரணங்கள் தொடர்பில் கிடைக்கும் கோரிக்கைக்காக 2021.03.24 ஆம் திகதிய இலக்கம் 2220/42 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்புதல்.

## 1.5.6. திட்டமிடல் பிரிவு

### 1.5.6.1 திட்டமிடல் பிரிவின் செயற்பாடுகள்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்காக செயற்திட்ட யோசனையை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு பரிந்துரை செய்து அனுப்புதல் மற்றும் அவர்களினால் செயற்திட்ட யோசனைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் பிரவேசங்களுக்க பதில் அனுப்புவதற்காக பல்கலைக்கழகத்துடன் தேவையான இணைப்புக்களை மேற்கொள்ளல்.

- வெளிநாட்டு வள திணைக்களத்துடன் இணைந்து வெளிநாட்டு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தேவையான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது கடன் மற்றும் உதவி வழங்கும் நாடுகளைப் போன்று வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரியதான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- வெளிநாட்டு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகினை தாபிப்பதற்கு உரியதான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்திட்ட பதவினை அங்கீரித்தல் மற்றும் ஆட்சோப்பிற்காக நிருவாகப் பிரிவுடன் இணைப்பினைப் பேனுதல்.

- பெயரிடப்படும் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்காக இறுதி செயற்திட்ட அறிக்கையினை தயாரித்து அதனை வெளிநாட்டு வளத் திணைக்களம், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் செயற்திட்ட வெளிநாட்டு நிதியம் வழங்கும் நிறுவனம். (donor) இற்கு அனுப்புதல்.

- உள்நாட்டு நிர்மாணிப்பு செயற்திட்டங்கள், வரவு செலவு யோசனை செயற்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்க உரிய செயற்திட்ட மேற்பார்வைத் திணைக்களத்தின் காலாண்டு முன்னேற்ற அறிக்கையினை தயாரித்து கையளித்தல்.

- ஜனாதிபதி செயலக அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம், பாராளுமன்றம் மற்றும் பொதுத்திறைசேரியினால் உள்நாட்டு நிர்மாண செயற்திட்டம், வரவு செலவு யோசனை செயற்திட்டம் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்படும் விசாரணைக்ளுக்கு உரியதான தகவல்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்து கையளித்தல்.

- வரவு செலவு மதிப்பீட்டினை தயாரிப்பதற்காக வெளிநாட்டு செயற்திட்டம் மற்றும் வரவு செலவு யோசனை செயற்திட்டங்களுக்கு உரியதாக வரவு செலவுத் திணைக்களத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிதி தேவைகளை பெற்றுக் கொண்டு திறைசேரியிற்கு அறிவிப்பதற்காக கணக்குப் பிரிவிற்கு வழங்குதல்.

- வரவு செலவுத் திட்ட உரையில் சமர்பிக்கப்பட வேண்டிய வரவு செலவு யோசனைகளுக்காக பல்கலைக்கழகத்தினால் செயற்திட்ட யோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வரவு செலவு யோசனை ஆவணத்தனை உள்ளடக்கப்பட வேண்டியசெ யற்திட்ட யோசனை ஆவணத்தினை தயாரித்து நிதி அமைச்சிற்கு வழங்குதல்.

- வரவு செலவு யோசனை செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக செயற்திட்டத்திற்கு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- வரவு செலவு யோசனை செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு உரியதாக தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் கோரிக்கை விடுக்கப்படும் மாதரிப்படிவங்களுக்கு அமைவாக முன்னேற்ற அறிக்கையினை தயாரித்து வழங்குதல்.

- வெளிநாட்டு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதாக மற்றும் பல்கலைக்கழகங்களின் வரவு செலவு யோசனை செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதான செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தினை நடாத்துவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளல், கூட்ட அறிக்கையினை தயாரித்தல், கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனை செய்தல் மற்றும் அமைச்சினால் அமுல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- உள்நாட்டு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உரியதாக மற்றும் வரவு செலவு யோசனை செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு உரியதாக காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் ஏனைய விஷேட கூட்டங்களை நடாத்துவதற்கான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல், கூட்ட அறிக்கையினைத் தயாரித்தல், கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனை செய்தல் மற்றும் அமைச்சினால் அமுல்படுத்தப்பட வேண்டிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- உள்நாட்டு நிர்மாணிப்பு செயற்திட்டங்கள், வரவு செலவு யோசனை செயற்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதனைப் போன்று இச் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் முன்னேற்றங்களை பரிசோதனை செய்வதற்காக துறைக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

- அரசாங்கத்தின் கணக்காய்வுப் பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்நாட்டு நிர்மாண செயற்திட்டங்கள், வரவு செலவு யோசனை செயற்திட்டம் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்படு கணக்காய்வுகளுக்கு பதில் வழங்குதல்.

- மாவட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டத்தினை வகுப்பதற்காக தேவையான தகவல்களை வழங்குதல்.

- அமைச்சின் வருடாந்த செயற்சாதனை அறிக்கை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

- அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையின் முமம்மொழிகளிலும் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வருடாந்த அறிக்கையினை மேற்பார்வை செய்தல்.

- அரசாங்கத்தின் கொள்கை வெளிப்பாடுகள் ஊடாக உயர் கல்வித்துறைக்கு பொருத்தமான அமைச்சின் இணைந்த திட்டத்தினை தயாரித்தல், செயற்சாதனை சுட்டியினை அடிப்படையாகக் கொண்டு புள்ளவிபரங்களை சேகரித்தல், பகுப்பாய்வு பேனுதல் மற்றும் சமகாலப்படுத்தல்.
- அமைச்சின் வருடாந்த செயற்சாதனை அறிக்கையினை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் அதற்கு உரிய காலாண்டு முன்னேற்றத்தினை அறிக்கைப்படுத்தல்.

- அமைச்சின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் இணைந்த திட்டத்தினை வகுப்பதனை மதிப்பீடு செய்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் அதற்காக தேவையான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல்.

- ஏனைய நிரல் அமைச்சுக்களில் மற்றும் திணைக்களங்களின் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை வகுக்கும் போது அமைச்சினைப் பிரதிநித்துவப்படுத்தி பங்களிப்பினை வழங்குதல்.

- வருடாந்தம் மற்றும் அரையாண்டு அல்லது காலத்திற்கு ஏற்றவாறு இலங்கை மத்திய வங்கி, குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் யுனெஸ்கோ நிறுவனத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் அறிக்கைக்காக புள்ளிவிபரங்களை வழங்குதல்.

- நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் இராஜதந்திர கலந்துரையாடல்களுக்காக பங்கேற்கும் தூதுச் சபை அங்கத்தவர்களுக்காக உயர் கல்வித் துறைக்கு உரியதாக தகவல்களை வழங்குதல்.
- நிலையான அபிவிருத்தி நோக்கிற்கான திட்டங்களை வகுப்பதற்கு பங்களிப்பு வழங்குதல்.
- பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனத்தினை தயாரித்து சமர்பித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக மேற்பார்வையினை வழங்குதல்.
- இலங்கையில் உயர் கல்வியிற்கான ஜனாதிபதி செயலணியின் மூலம் பொறுப்பளிக்கப்படும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் ஒழுங்கமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### 1.5.7. அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவு

உயர் கல்வியிற்காக காணப்படும் உயரிய கேள்வியிற்கு அமைய தகமை பெறும் அனைத்து அபேட்சகர்களுக்கும் கல்வியிற்கான வாய்ப்பினை வழங்குவதற்கு அரச பல்கலைக்கழகங்களுக்கு உரிய வரையறுக்கப்பட்ட கொள்ளவு போதியளவு அமைவிதில்லை. எனவே, மாற்று செயற்பாடாக அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் ஊடாக அவர்களுக்கு வாய்ப்பினை வழங்கும் இணைவான முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு, அரச சார்பற்ற பிரிவின் அபிவிருத்தி மற்றும் மேற்பர்வைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிற்கு நேரடியாக பொறுப்பளிக்கப்பட்டது. இதற்கு அமைய 2013 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு தாபிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 அ பிரிவிற்கு அமைய, உயர் கல்வி நிறுவகம் பட்டத்தினை வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கும் அங்கீகரிக்கும் பணிகளுக்காக உரிய பொறுப்பாளராக, உயர்கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவ் விடயஙத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்டார். இச் செயற்பாடுகளுக்கு உரிய பணிகள் இப் பிரிவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது.

### 01. அங்கீகார மற்றும் தராதர உறுதிப்படுத்தல் தொடர்பான நிலையான குழு (SCAQA)

1976 ஆம் ஆண்ன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டததில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக:கு அமைய, உயர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் உரிய அமைச்சின் செயலாளர் தகுதிவாய்ந்த உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு அமைய பட்டத்தினை வழங்கும் நிறுவனத்தினை அங்கீகரிக்கும் செயற்பாடுகளின் போது தமக்கு உதவுவதற்காக தகுதிவாய்ந்த பொறுப்பாளரினால் அங்கீகார மற்றும் தர உறுதிப்பாடுகள தொடர்பான நிலையான குழு நியமிக்கப்பட்டுள்ளது. 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 வரையான காலத்திற்குள் அக் குழுவினால் 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5.7.1. வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம்

**பின்னனி**

2017 வரவு செலவு யோசனைத்திட்டத்திற்கு அமைய, உயர்கல்வியிற்காக காணப்படும் பிரவேசத்தினை விரிவுபடுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம் (IFSLS) 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்வியினைத் தொடர்வதற்காக காணப்படும் வாய்ப்பு விரிவுபடுத்தப்படுவதுடன், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியிற்கு அத்தியவசியமான உயரிய தேர்ச்சி கொண்ட மானிட மூலதனத்தினை கட்டியெழுப்பபுவது இவ் யோசனைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் யோசனைத் திட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்காத மற்றும் நிதி சிரமங்களை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு, அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனங்களில் (DAIs) பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக வட்டியற்ற மாணவர் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. இப் பாடநெறி கட்டணத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்ச கடன் நிதி ரூபா 1,500,000 அகும். இதற்கு மேலதிகமாக, வாழ்க்கைச் செலவு மற்றும் ஏனைய சார்ந்த செலவின்ங்களைத்

தீர்ப்பதற்காக ரூபா 300,000 வுரையான விருப்பத்திற்குரிய புலமைப்பரிசில் கடன் நிதி (Stipend loan) பெற்றுக் கொள்ள முடிகின்றது.

## 1.6. உயர் கல்வி நிதி முன்னேற்றம் - 2025

2025 ஆம் ஆண்டிற்காக உயர் கல்வித்துறைக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் பயன்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் | மீண்டெழும் | | | மூலதனம் | | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2025 (ரூபா.மி.) | | | 2025 (ரூபா.மி.) | | | 2025 (ரூபா.மி.) | | |
| | ஒதுக்கீடு | செலவினம் | % | ஒதுக்கீடு | செலவினம் | % | ஒதுக்கீடு | செலவினம் | % |
| உயர் கல்விப் பிரிவு | 269 | 261 | 97% | 24 | 21 | 87% | 293 | 282 | 96% |
| வுரவு செலவுத் திட்டம் | 2869 | 1978 | 69% | 1,862 | 1,451 | 78% | 4,731 | 3,429 | 72% |
| வெளிநாட்டு செயற்திட்டம் | 0 | 0 | | 25,214 | 22,105 | 88% | 25,214 | 22,105 | 88% |
| உயர் தொழில்நுட்ப நிறுவகம் | 1364 | 1361 | 100 % | 200 | 200 | 100 % | 1,564 | 1,561 | 100 % |
| பௌத்த மற்றும் பாலிப்பல்கலைக்கழகம் | 583 | 567 | 97% | 230 | 139 | 60% | 812 | 705 | 87% |
| இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் | 536 | 518 | 97% | 343 | 319 | 93% | 879 | 837 | 95% |
| அமைச்சின முழு மொத்தம் | 5,621 | 4,684 | 83% | 27,872 | 24,234 | 87% | 33,493 | 28,918 | 86% |
| பல்கலைக்கழக மானி ஆணைக்குழு | * | * | * | * | * | * | * | * | * |
| **முழு மொத்தம்** | **5,621** | **4,684** | **83%** | **27,872** | **24,234** | **87%** | **33,493** | **28,918** | **86%** |

*1.5 அட்டவணை*

## 1.7 வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவியின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்.

2025 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த மூலதன செலவினத்தில் ரூபா 23,718 மில்லியன் வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள செறயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட செலவினம் ரூபா 23,718 மில்லியன் 09 செயற்திட்டங்களில் அடங்குகின்றன. செயற்திட்ட ஆவணம் இணைப்பு 01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட செலவினம் ரூபா 1,000 மில்லியனைவிட மேற்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.7.1 கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு விஞ்ஞான பீடத்திற்காக கட்டத் தொகுதியினை நிர்மாணிக்குமம் செயற்திட்டம் - கிழக்குப் பல்கலைக்கழகம்.

இச் செற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூபா **5,480** மில்லயன் என்பதுடன், அதில் நிர்மாண செயற்பாடுகளுக்காக மாத்திரம் ரூபா **2,507** மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் செயற்திட்டம் 2026 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்படவுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்காக இச் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ரூபா **1,207.9** மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன். இச் செயற்திட்டம் அரேபிய பொருளாதார அபிவிருத்தியிற்கான குவைட் நிதியத்தின் மூலம் கிடைக்கும் கடன் நிதியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டத்தினை முழுமையாக பூர்த்தி செய்ததன் பின்னர், வைத்திய பட்டத்திற்காக வருடாந்தம் 100 பட்டதாரிகள், தாதி பட்டத்திற்காக 70 பட்டதாரர்கள், மருந்தாளர் பட்டத்திற்காக 20 பேர்கள் மற்றும் பொது சுகாதாரம் தொடர்பான பட்டத்திற்காக 20 பேரும், இப் பீடத்திற்கு வருடாந்தம் பட்ட அபேட்சக

மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடிகின்றது. அத்துடன் மூலம் இப் பீடத்தின் கீழ் கீழ் குறிப்பிடப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட 03 கற்கைத் திணைக்களங்களைத் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

I. ஆரம்ப சுகாதார சேவை கற்கைப் பரிவு மற்றும் வைத்திய கற்கைப் பிரிவு

II. சிகிச்சை சார் விஞ்ஞான கற்கைப் பிரிவு மற்றும் மேலதிக வைத்திய கற்கைப் பிரிவு.

III. மானிட வள கற்கைப் பிரிவு மற்றும் நோயியல் விஞ்ஞான கற்கைப் பிரிவு.

### 1.7.2 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மானிட வள அபிவிருத்தி செயற்திட்டம்.

இச் செயற்திட்டம் பிரதான நோக்கமாக அமைவது சந்தைக்கு உரிய திறமை மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு சக்தியுடன் பலம்பொருந்திய தொழில்நுட்ப – திசைமுகப்படுத்தலிற்காக இலங்கையின் பல பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்திற்கு உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அப் பல்கலைக்கழகங்களுக்கு களனிப் பல்கலைக்கழகம், ரஜரட்டைப் பல்கலைக்கழகம், சப்பரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழங்கள் போன்றன அடங்குகின்றன. இச் செயற்திட்டத்தின் மூலம் நவீன தொழில்நுட்ப மற்றும் கைத்தொழிலிற்கு உரிய கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குதல், பண்புசார்தரம் கொண்ட பாடவிதானத்தினை திட்டமிடல், கைத்தொழில் கேள்விகள் மற்றும் சர்வதேச தரங்களுக்கு அமைவாக கல்விசார் பணியாளர் சபைக்கு உதவிகளை வழங்குதல், போட்டிகரமான கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக ஒத்துழைப்பு யோசனைத்திட்டம் மற்றும் கொள்ளவு அபிவிருத்தியிற்கான வாய்ப்புக்களை வழங்குதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. மேலதிகமாக உத்தேச புதிய உயர் கல்வி செயற்திட்டத்தினை வகுக்கும் போது அரசாங்கத்திற்கு உதவுவதற்கான உள்ளீடுகளும் இச் செயற்திட்டத்தில் அடங்குகின்றன.

செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூபா 26,400 மில்லியனாகும். (165 மில்லியன் அமெரிக்க டொலர்) அதில் ரூபா 23,200, மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனின் கீழ் மற்றும் எஞ்சிய நிதி உள்நாட்டு நிதியத்தின் கீழ் நிதியாக்கம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 13,490.30 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்த பௌதீக முன்னேற்றம் 85% ஆகும். 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. இப் புதிய பீடத்தினை நிர்மாணித்ததன் பின்னர் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு வருடத்திற்காக 1,500 மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடிகின்றது. செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் கூடுதலான விகிதாசாரம் ஒதுக்கப்பட்டு இருப்பது பீடங்களை நிர்மாணிப்பதற்கு மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காகும். இதன் கீழ் நான்கு பல்கலைக்கழங்களுக்காக பசுமையான கட்டட தரங்களுக்கு அமைய மற்றும் பொண்களுக்கு உகந்த வசதிகள் கொண்ட பீடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் இச் சகல பீடங்களுக்காவும் தேவையான இரசாயண வசதிகள், உபகரணங்கள் இச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

நிர்மாண செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

*1.6 அட்டவணை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மானிட வள அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் பீடங்களின் நிர்மாணிப்புக்கள்.*

**ரூபா.மி.**

| பீட கட்டடங்கள் | மதிப்பீட்டு செலவினம் | ஒப்பந்த வழங்கள் | திரண்ட செலவினம் ஜூ | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| தொழில்நுட்ப பீடம், களனிப் ப. | 4,079.60 | 3,032.70 | 4,701.55 | 100 | 100 |
| தொழில்நுட்ப பீடம், சப்பரகமுவ ப. | 1,941.50 | 1,521.24 | 2,550.84 | 100 | 100 |
| பொறியில் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர ப. | 4,189.20 | 3,624.96 | 6,092.53 | 100 | 100 |
| தொழில்நுட்ப பீடம், ரஜரட்டைப் ப. | 2,933.70 | 3,000.00 | 5,600.59 | 100 | 100 |
| தொழில்நுட்ப பீடம், மொரட்டுவைப் ப. | 844.00 | 597.33 | 748.03 | 100 | 100 |
| **மொத்தம்** | **13,988.00** | **11,776.23** | **19,693.54** | | |

*** விலையினை அதிகரிக்கும் செலவினம் (price escalation payment) உள்ளடங்கியுள்ளது.**

இச் செயற்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பான 22 யோசனைகளுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது பல்கலைக்கழக மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7.4 வடமேல் பல்கலைக்கழக நகர அபிவிருத்தி செயற்திட்டம்

அபிவிருத்தியிற்கான சவுதி அரேபிய நிதியம் (SFD) சவுதி ரியால் 105 கலுகைக் கடனின் கீழ் அமுல்படுத்தப்படும் வடமேல் பலக்லைக்கழக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 28 மில்லியன் அமெரிக்க ஆகும். ‘‘வடமேல் பல்கலைக்கழக நகர அபிவிருத்தி வேலைத்திட்டம்’’ அண்மையில் உள்ள பல்கலைக்கழக சமூகத்துடன் நெருங்கிய இடைச் செயற்பாடுகளை விருத்தி செய்வதனைப் போன்று கிராமிய பிரதேசங்களைப் பலப்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி தாக்கங்களை ஏற்படுத்தும் நோக்காகக் கொண்ட புதிய எண்ணக்கருவாகும். இச் செயற்திட்டம் பல்கலைக்கழகத்தின் கல்வி வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனைப் போன்று பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைவது இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்திற்கான அறிவினை அடிப்படையாகக் கொண்ட சுய நம்பிக்கை மற்றும் நிலையான சமூகத்திற்கு இடையிலான செயற்பாட்டு முறைமையினை தாபிப்பதாகும். இப் பல்கலைக்கழகம் நகர அபிவிருத்தி செயற்திட்ட பல்கலைக்கழகத்தின் குளியாப்பிடிய வளாகம் மற்றும் மாகந்துர வளாகத்தினை தழுவுகின்றது. 2025 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,897.00 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டதுடன் மொத்த பௌதீக முன்னேற்றம் 99.26 % வீதமாகும். .





பல் செயற்பாட்டு மத்திய நிலையம் , வடமேல் பல்கலைக்கழகம் - மாந்துர வளாகம்.

நூலக கட்டம், வடமேல் பல்கலைக்கழகம் - குளியாப்பிடிய வளாகம்

## 1.8. வரவு செலவு யோசனைத் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

மதிப்பீட்டு செலவினம் ரூபா 15,490 மில்லியன் பெறுமதியான வரவு செலவு யோசனை 10 செயற்திட்டங்களுக்காக 2025 ஆம் ஆண்டில் ரூபா 6,354 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்ட ஆவணம் இணைப்பு 02 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### 1.8.1 ருஹுனு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திற்காக பண்ணிரண்டு மாடிகளைக் கொண்ட கட்டத்தின் நிர்மாண செயற்திட்டம்.

2017 ஆம் ஆண்டில் வரவு செலவு யோசனைக்கு அமைய அமுல்படுத்தப்பட்டுள்ள இச் செயற்திடடத்தின் மொத்த செலவினம் ரூபா 3195.00 மில்லியனாகும். 8இ199 சதுர மீற்றர் நிலப்பரப்பினைக் கொண்ட செயற்திட்டத்திற்காக 2025 ஆம் ஆண்டிற்காக ரூபா 434 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந் நிதியின் மூலம் ரூபா 405.39 மில்லியன் முழுமையான நிதியும் 2025.12.31 ஆம் திகதியளவில் செலவிடப்பட்டுள்ளதுடன் 2025.12.31 ஆம் திகதியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட செலவினம் ரூபா 1,662.94 மில்லியனாகும். முதலாவது ஒப்பந்தாரருக்கு பணியினை ஆரம்பிப்பதற்காக

முற்பணமாக 2018.01.07 ஆம் திகதி ரூபா 187 மில்லியன் நிதி வழங்கப்பட்டு இருந்ததுடன் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் குறைந்த முன்னேற்றம் காரணமாக 2019.12.23 ஆம் திகதிய முதலாவது ஒப்பந்தத்தினை இரத்து செய்து 2020.07.09 ஆம் திகதியளவில் செயற்திட்டம் புதிய ஒப்பந்த கம்பனியிற்கு வழங்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகததியளவில் 72% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்ட வைத்திய மாணவர்களின் எண்ணிக்கை 160 தொடக்கம் ஒரு வருடத்திற்கு 10 மாணவர்கள் வீதம் 4 ஆண்டுகளுக்குள் 40 மாணவர்களினால் அதிகரித்து வருடாந்தம் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 200 ஆக மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 1.8.2 றுஹுனு பல்கலைக்கழகத்திற்காக வைத்திய பீடத்தினை நிர்மாணிப்பதற்காக போராசிரியர் அலகினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்.

Huawei Technologies Lanka Company (Pvt.) Ltd இனால் 2016 ஆண்டு தொடக்கம் "Seeds for Future" வேலைத்திட்டம் உள்நாட்டு தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப திறைமையினை விருத்தி செய்வதற்காக உலகளாவிய CSR முன்னனி வேலைத்திட்டமாக அமுல்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் தொடர்புசாதனத்துறை மீது கூடுதலான விளக்கம் மற்றும் ஆர்வத்தினை கட்டியெழுப்புதல் மற்றும் பங்கேற்பு விருத்தி செய்யப்படுகின்றது. இதன் கீழ் இலங்கை அரச பல்கலைகழகங்களில் பட்ட எதிர்பார்ப்பு கொண்ட மாணவர்களுக்காக வருடாந்தம் புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றன.

2025 ஆண்டிற்காக Huawei Technologies Lanka Company (Pvt.) Ltd இனால் மேற்கூறப்பட்ட புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கை பட்ட அபேசகர்களுக்காக 06

புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. தோந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆகஸ்ட் 26 ஆம் திகதி வரை சீனாவிற்கு சுற்றுலா மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் வேலைத்திட்டம் மாணவர்களுக்கு தொழில்நுட்ப துறையின் அனுபவம் மற்றும் சீன காலச்சாரம் தொடர்பாக கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

**வீசா (Visa) வசதிகளை வழங்குதல்.**

அனைத்து பலக்லைக்கழகங்களினால் கற்கை மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் வெளிநாாட்டு விரிவுரையாளர்களுக்காக பிரவேச வீசா (Entry Visa) மற்றும் நாட்டிற்கு வருகைதந்ததன் பின்னர் உரிய கால எல்லைக்கு அமைய தங்கியிருப்பதற்கான வீசா (Residence Visa) வழங்குதல் மற்றும் நீண்டகாலத்திற்காக பரிந்துரை செய்யப்பட்ட நேரடியாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்கு சமா்பிப்பதற்கு இலகுபடுத்தும் வகையில் புதிய வீசா வழிகாட்டல் ஆலோசனைகள் 2025/01/01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தக் கூடிய வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 4. உயர் கல்வித்துறையில் சா்வதேச கல்வி ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

### 4.1 டோக்கியோ சாசனத்தினை அங்கீகரித்தல் (Ratify)

1970 ஆவது தசாப்தம் தொடக்கம் உயர்கல்விதுறைக்கு உரியதாக உலகளாவிய அசைவுகள் அதிகரித்ததைத் தொடா்ந்து, யுனேஸ்கோ அமைப்பினால் வலய ஆறு சாசனங்களை அங்கீகரித்து, அமுல்படுத்தப்பட்டுள்ளது. கல்வியின் உலகளாவிய நிலமையினை கருத்திற் கொண்டு பல்வேறுபட்ட நாடுகளில் கல்வித் தகமைக்கு சமமான மற்றும் நியாயமாக அறிமுக்படுத்தலின் முக்கியத்துவம் தொடா்பாக இச் சாசனம் ஊடாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் உலகின் 122 நாடுகளில் இவ் உயர் கல்வி தொடா்பிலான வலய சாசனம் ஒன்று அல்லது பல்வேறுபட்ட அங்கீகாரங்கள் அங்கீகாரங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன ஊடாக இந் நாடுகளுக்கு உயர் கல்வித்துறையில் பல விஷேட வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.
இதில் 1983 ஆம் ஆண்டின் பாங்கொக் சாசனத்தினை சமாகாலப்படுத்தி 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட டோக்கியோ சாசனம், இலங்கைக்கு உரிய பிராந்திய சாசனமாகும். இது உயர் கல்வியின் தகமைகளை அங்கீகரிப்பது தொடா்பான ஆசிய – பசுபிக் வலய சாசனமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இலங்கையை ஆசியாவின் கேந்திர நிலயமாக மாற்றியமைக்கும் நோக்கினை எட்டுவதற்கும், இலங்கையின் உயர் கல்வித்துறையின் உலகளாவிய கல்வித் துறைக்கு திறப்பதற்கும், உலகம் பூராகவும் தொழில் சந்தைக்காக இலங்கையில் பயிற்சி பெற்ற ஊழிய அணியினை ஈடுபடுத்துவதற்கு உதவக் கூடிய இவ் உயர் கல்வியின் தகமைகளை அங்கீகரிப்பது தொடா்பான டோக்கியோ சாசனத்தினை அங்கீகரிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு அமைய, உயர் கல்வியின் தகமைகள் தொடா்பான டோக்கியோ சாசனத்தினை அங்கீகரித்தல் (Ratify) தொடா்பாக வெளிநாட்டு அமைச்சின் இணக்கம் மற்றும் கௌரவ சட்டமா அதிபரின் மேற்பாா்வை ஏற்கனவே கிடைத்துள்ளது.

### 4.2 Erasmus+ உயர் கல்வித்துறைக்கு உரியதான கொள்ளவு விருத்தி வேலைத்திட்டம்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலகம் பூராகவும் நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்பினை பலப்படுத்தி நீண்டகாலமாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் ERASMAS+ எனப்படும் கல்வி, பயிற்சிகள், இளைஞா் மற்றும் விளையாட்டிற்காக உதவுவதற்கான ஐரோப்பிய ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டமாகும். இவ் வேலைத்திட்டத்துடன் தொடா்புபடுவதன் மூலம் இலங்கை பல்கலைக்கழக / உயர் கல்வி நிறுவனங்களுக்கு தமது மாணவர்கள் மற்றும் கல்விசாா் பணயாளா்களை பறிமாறிக் கொள்ளல், கொள்ளவினை விருத்தி செய்தல், கூட்ணைந்த பட்ட கற்கை வேலைத்திட்டங்கள் போன்ற சா்வதேச கண்காணிப்புக்களை மேம்படுத்தும் வேலைத்திட்டத்திற்காக வழங்கள்களை பெற்றுக் கொள்ள முடிகின்றது.

Erasmus+ வேலைத்திட்டத்துடன் இலங்கையில் பலம்பொருந்திய இணைப்பினை சித்தரித்துக் காண்பித்து வலய Erasmus+ கூட்டங்கள் மற்றும் இணைப்புக்களை ஏற்படுத்தும் கருத்தரங்கு (Regional Erasmus+ Cluster Meeting and Contact-Making Seminar 2025 from 18th to 20th November 2025) நடாத்துவதற்காக

ஐரோப்பிய ஆணைக்குழுவினால் இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் அது வெற்றிகரமான முறையில் 2025 நவம்பர் மாதம் 18 தொடக்கம் 140 இற்கு அண்மித்த எண்ணிக்கை பங்கேற்பு இடம்பெற்றது. இதன் மூலம் இலங்கை பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு, வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களுடன் தமது ஒத்துழைப்பினை பலப்படுத்துவதற்கு மற்றும் எதிர்கால Erasmus+ பங்குடமை மற்றும் நிதியத்தின் சந்தர்ப்ப ஆய்வுகளை மேற்கொள்வதற்கு பெறுமதியதாக தளம் வழங்கப்பட்டது. இதன் போது விஷேடமாக இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டு பங்குடமையாளர்களுடன் வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கும் Erasmus+ வேலைத்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தல்களை மேம்படுத்துவதனையும் நோக்கமாகக் கொண்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சினால் தேசிய Erasmus+ தகவல் அமர்வு (National Erasmus+ Information Session) பிரதான கருத்தரங்கிற்கு இணைவாக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டத்திற்காக சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பட்டதாரிகள், பீட பொறுப்பாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் இருந்து 175 இற்கும் மேற்பட்ட புத்திஜீவிகள் பங்கேற்றனர்.

**4.3 இலங்கை பல்கலைக்கங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்க இடையிலான கல்விசார் ஒத்துழைப்பினை நோக்காக் கொண்ட புரிந்துணர்வு உடண்படிக்கை / உடண்படிக்கையினை எட்டுதல்.**

இதன் கீழ் கடந்த ஆண்டுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

I. புரஸ்பரீதியில் ஆர்வம் காண்பிக்கும் துறைகளில் நிறைவேற்று கல்வி வேலைத்திட்டங்களை நடாத்துவதனை நோக்காக் கொண்டு இலங்கையில், ஸ்ரீ ஜளவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் சீன மக்கள் குடியரசின் வூஹான் விளையாட்டு பல்கலைக்கழகம் (The Wuhan Sports University, The People's Republic of China) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

II. ஒருங்கிணைனந்த ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் தேசிய அல்லது சர்வதேச செயற்திட்டங்களுக்காக விண்ணப்பித்தல் மற்றும் ஊக்குவிப்பு ஒத்துழைப்பினை நோக்காக் கொண்டு இலங்கையில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் அயிசு பல்கலைக்கழகம் (The University of Aizu, Japan) இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கயினை எட்டுதல்.

III. ஒருங்கிணைந்த ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவிப்பதனைப் போன்று மாணவர் மற்றும் கல்வி பணியாளர் சபையினை பறிமாறிக் கொள்ளும் வேலைத்திட்டம், ஒருங்கிணைந்த செயலமர்வு மற்றும் பயிற்சி அமர்வினை நடாத்துதல், வெளியீடுகளை பறிமாறிக் கொள்வதனை நோக்காக் கொண்டு இலங்கையில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மற்றும் நேர்வே அக்டர் பல்கலைக்கழகம் (The University of Agder, Norway) இற்கு இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

IV. புரஸ்பர ரீதியில் பிரதிலாபங்களை பெற்றுக் கொள்ளும் குறுகிய கால பயிற்சிப் பாடநெறி மற்றும் செயற்திட்டத்தினை அடையாளம் கானும் நோக்குடன் இலங்கையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலிய டிகின் பல்கலைக்கழகம் (The Deakin University of Australia) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

V. விஷேட குறுகிய கால கற்கை வேலைத்திட்டம் மற்றும் செயற்திட்டத்தினை நடாத்துதல் மற்றும் கல்விசார் பணியாளர் சபை பறிமாற்றல்களை மேற்கொள்ளல் போன்ற விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கையில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் சீனாவின் லின்ஸ் பல்ககைலக்கழகம் (The Linyi University of the People's Republic of China ) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

VI. ஆராய்ச்சி மற்றும் கல்வி வேலைத்திட்டங்களுக்கு உரியதான கற்பித்தல். கற்றல் பெருட்கள் மற்றும் ஏனைய உரிய இலக்கிய தகவல்களைப் பறிமாறிக் கொள்ளல், பரஸ்பர ஆர்வம் காண்பிக்கும் துறைகளில் குறுகியகால தொடர்ச்சியான கல்வி வேலைத்திட்டங்கள், கருத்தரங்கு அல்லது செயலமர்வுகளை கூட்டிணைத்து ஒழுங்கு செய்தல், நிதியத்தினை வழங்கும் நிறுவனங்களினால் அனுசரணை வழங்கும் ஆராய்ச்சிகள் அல்லது பயிற்சி வேலைத்திட்டங்கைள ஒருங்கிணைப்பதற்காக யோசனை தெரிவித்தல் மற்றும் அதில் ஈடுபடல், கல்வி மற்றும் / அல்லது ஆராய்ச்சியிற்காக வரையறுக்கப்பட்ட கால எல்லைக்காக புரிந்துணர்வு அடிப்படையில் மாணவர்களை பறிமாறிக் கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்களை நடாத்துவதனை நோக்ககாக் கொண்டு இலங்கையில் போராதனை பல்கலைக்கழகம் மற்றும் இந்திய மஹத்மா காந்தி வைத்திய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கல்லூரி (Mahatma Gandhi University of Medical Sciences and Technology-MGUMST) இற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

VII. பல்கலைக்கழகத்தில் மாணவர் கேந்திர கல்வியினை ஊக்குவித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் கல்வி செயற்பாடுகளின் அபிவிருத்தியிற்காக தேவைாயான கற்றல் உதவிகள், பாடநூல்கள் போன்ற வளங்களைப் பறிமாறிக் கொள்ளல் போன்றவற்றை நோக்காக் கொண்டு இலங்கையில், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் சீன குடியரசின் சன்டொன்க் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (Shandong University of Science and Technology, China) இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

VIII. ஆராய்ச்சி ஒத்துழைப்பு வேலைத்திட்டம், பீட கற்கை பணியாள் சபை மற்றும் மாணவர் பறிமாற்றல் வேலைத்திட்டம், வெளிநாடுகளிலி கற்கை வாய்ப்புக்கள், சிகிச்சை அனுபவங்கள், ஆலோசனை மற்றும் கலாச்சால வேலைத்திட்டங்கள் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கையில், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் Cortland இல் நிவ்யோர்க் அரச பல்கலைக்கழகம் (State University of New York College at Cortland, United States of America) இடையிலான புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

IX. பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பு பாடநெறி வேலைத்திட்டதின் இணைப்புக்களுடனான ஒத்துழைப்புடன் செயற்படும் நோக்குடன் அவுஸ்திரேலிய ரோயல் மெல்போர்ன் தொழில்நுட்ப நிறுவகம் (Royal Melbourne Institute of Technology மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

X. விஞ்ஞான, ஆராய்ச்சி மற்றும் கல்வி ஒத்துழைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக, இரு தரப்பின் பரஸ்பர இணக்கத்திற்கு அமைய அடையாளம் காணப்பட்ட விஞ்ஞான விடயங்கள் தொடர்பில் கூட்டிணைந்த ஆராய்ச்சியினை மேற்கொள்ளல், இரு தரப்பு கல்விசார் பணியாளர் சபை மற்றும் மாணவர்களை பறிமாறிக் கொள்ளல், வெளியீடு, பாடநூல் மற்றும் விஞ்ஞான ஆவணங்கள் போன்றவற்றை பறிமாறிக் கொள்ளல், கல்விசார் பணியாளர் சபையின் அனுபவங்களை பறிமாறிக் கொள்ளல், விஞ்ஞான மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வதனை நோக்காக் கொண்டு இலங்கையில் களனிப் பல்கலைக்கழகம் மற்றும் பெலரூஸ் குடியரசின் பொலஸ்கி அரச பல்கலைக்கழகம் (The Polessky state University, Republic of Belarus) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XI. இரு நாடுகளின் பலகலைக்கழகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் மற்றும் கூடுதலாக விருத்தி செய்தல், இரு பல்கலைக்கழங்களின் பீடங்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையில் கல்வி, தொழில் மற்றும் கலாச்சார செயற்பாடுகளுக்காக உதவிகளை வழங்குதல், புத்திஜீவிகளின் ஒத்துழைப்பினை ஏற்படுத்தல், கலாச்சார செயற்பாடுகளுக்கு இடையிலான மற்றும் நற்புறவினை விருத்தி செய்வதனை நோக்காக் கொண்டு இலங்கையில் களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இரசிய கூட்டரசின் விலடிமீர் இராச்சியப் பல்கலைக்கழகம் ( The Vladimir State University of the Russian Federation) இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XII. நிபுணர்கள், புத்திஜிவீகள், கல்விசார் பணியளார் சபை மற்றும் மாணவர் பறிமாற்றல்களை மேற்கொள்ளல் பட்டதாரிகளின் இணை மேற்பார்வை, கூட்டிணைந்த விஞ்ஞான ஆராய்ச்சியினை நடாத்துதல், தகவல்கள், ஆவணங்கள் மற்றும் விஞ்ஞான வெளியீடுகளை பறிமாறிக் கொள்ளல், பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் சமூக சேவையின் அனுபவங்களைப் பறிமாறிக் கொள்ளல், கருத்தரங்கு, மாநாடுகள் மற்றும் விஞ்ஞான கூட்டங்களை நடாத்துததல், பயிற்சி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் புலமைப்பரிசில் வேலைத்திட்டங்கள் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தல் போன்றவற்றை நோக்காக் கொண்டு இலங்கையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் உடலியல் விஞ்ஞான கற்கை பீடம் மற்றும் தாய்லாந்தின் சுலோலொன்கோன் பல்கலைக்கழகத்தின் பெற்றோலிய வள மற்றும் கனிய வள இரசாயண கல்லூரி (The Petroleum and Petrochemical College, The Chulalongkorn University, Kingdom of Thailand) இற்கு இடையிலான புரிந்துணர்வு உடண்படிக்கையினை கைச்சாத்திட்டல்.

XIII. புவியியல் விஞ்ஞான துறையினை ஊக்குவிக்கும் வகையில் சீனா - இலங்கை கூட்டு கற்கை மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் பங்கேற்பிற்கு அமைய, பரஸ்பர இணக்கம் கொண்ட துறைகளில் கற்கை மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்வதனை அப்படையாகக் கொண்டு இலங்கையில் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் மக்கள் சீனக் குடியரசின், சீன விஞ்ஞான அகடமியின் கீழ் காணப்படும் புவியல் விஞ்ஞான மற்றும் புவியியல் பௌதீக விஞ்ஞான நிறுவகம் (The Institute of Geology and Geophysics) இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இரண்டு நிதியம் வழங்கப்படும் நிறுனங்கள் மூலம் ஆராய்ச்சி வழங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கூட்டிணைந்த விண்ணப்படிவங்களை சமர்பித்தல். கூட்டிணைந்த ஆராயச்சியினை நடாத்துதல், விஞ்ஞான ஆய்வுகள் மற்றும் மாணவர் பறிமாற்றல் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் போன்றவற்றை அமுல்படுத்துவது நோக்கமாகும்.

XIV. சர்வதேச கலைசார் ஒத்துழைப்பு, கலாச்சார செயற்பாடுகள் மற்றும் நடபுறவு, மாணவர் மற்றும் கல்விசார் பணியளார் சபை பறிமாற்றல்கள், கூட்டிணைந்த ஆராய்ச்சிகள், கருத்தரங்கு மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றை ஒழுங்கு செய்வதனை நோக்காக் கொண்டு இலங்கையில் களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய பாரதீதாசன் பல்கலைக்கழகம் (Bharathidasan University) இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

XV. கற்கை மற்றும் கற்கை ஆராய்ச்சித் துறைகளின் ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்காக இரு பலக்லைக்கழகங்களுக்கு இடையில் மாணவர்கள், கல்விசாரா பணியாளர்கள், பட்டப்பின் படிப்பு மாணவாகள் மற்றும் பீட அங்கத்தவர்களை பறிமாறிக் கொள்ளல் மற்றும் சுற்றுலாவினை ஊக்குவித்தல், டைபூன் விஞ்ஞான ( typhoon sciences) துறைக்குரிய தகவல்கள் மற்றும் பறிமாற்றல்களை மேற்கொள்வதற்காக மற்றும் கூட்டிணைந்த ஆராய்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கற்கை வேலைத்திட்டங்களை நடாத்துவதனை நோக்காகக் கொண்டு இலங்கையில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் யொகொஹமா தேசிய பல்கலைக்கழகத்தின் பல்வகை விஞ்ஞான நிறுவகம் ( Institute for Multidisciplinary Sciences, Yokohama National University of Japan ) இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XVI. மாணவர்கள் மற்றும் கல்விசார பணியாளர் சபையினை பறிமாற்றல், கற்கை வெளியீடுகள் மற்றும் தகவல்களை பறிமாறிக் கொள்ளல், கூட்டிணைந்த ஆராய்ச்சிகள் மற்றும் கருத்தரங்கினை நடாத்துதல் மற்றும் ஜப்பான் உட்பட ஆங்கில மொழி பயிற்சியினை வழங்குவதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கையில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் டொகுயமா பல்கலைக்கழத்தின், தேசிய தொழில்நுட்ப நிறுவகம் (National Institute of Technology, Tokuyama College (NITTC), Japan) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XVII. உணவுப் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதாரம் தொடர்பில் காணப்படும் சாலவ்கள் மற்றும் அதற்கு தீர்வுகளை அடையாளம் காணும் வகையில் காலநிலை போரழிவுகள் மற்றும் சூழல் மாசடைதல் தொடர்பான சர்வதேச நீர் மாநாட்டினை நடாத்துவதற்குது உரியதாக ஒரு பெல்ட் மற்றும் திசையிற்காக தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான கூட்டிணைப்பு (Alliance of National and International Science Organizations for the Belt and Road Regions – ANSO) மற்றும் இலங்கையின் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு இடையிலான செயற்திட்ட உடன்படிக்கையினை எட்டுதல், இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் பிராந்திய ரீதயில் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் சூழல் மற்றும் பொது சுகாதார பிரச்சினைகளுக்கு பதிலை அடையாளம் கானுதல் மற்றும் சர்வதேச

ஒத்துழைப்பினை விருத்தி செய்து நிலையான அபிவிருத்தி நோக்கினை எட்டுவதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

XVIII. மானிட மற்றும் கால்நடைகளிலும் சமூகத்திலும், சூழலிலும் MRSA நோய் (Methicillin Resistant Staphylococcus Aureus). பரவுவது தொடர்பாகவும், அவற்றின் நுண்ணியிரியல் பேரழிவுகள் மற்றும் உயிரியல் பேரழிவு நொய்எதிர்ப்பு சக்திகளை தெளிவுபடுத்தவதற்காகவும், மரபனு பல்வகைத்தன்மையினை ஆராய்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையகாக் கொண்டு இலங்கையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் சீனா ஹொங்கொங் சீன பல்கலைக்கழகம் (The Chinese University of Hong Kong of the People's Republic of China) இடையில் ஆராய்ச்சி ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கு ගිවිසුම්කට (Research Collaboration Agreement) மற்றும் பொருள்சார் பறிமாற்றல் உடன்படிக்கை (Material Transfer Agreement) எட்டுதல்.

XIX. கல்வி ஒத்துழைப்பினை மேம்படுத்தல், பீடங்கள் மற்றும் மாணவாகளுக்கு இடையிலான கல்வி, தொழில் மற்றும் கலாச்சார செயற்பாடுகள் மூலம் நட்புறவினை மேம்படுத்துவதற்கும், கூட்டிணைந்த ஆராய்ச்சிகள், கருத்தரங்குகள் / செலமர்வுகளை நடாத்துதல் போன்றவற்றை நோக்காக் கொண்டு இலங்கையில் களனிப் பல்கலைக்கழக மற்றும் ஜப்பான் - கியோதோ தகவல் விஞ்ஞான பட்ட கற்கை கல்லூரி ( Kyoto College of Graduate Studies for Informatics – KCGI ) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XX. பரஸ்பர இணக்கத்துடன் துறைகளில் கற்கை மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும், கற்கைசார் தகவல்கள் மற்றும் பொருட்களை பறிமாறிக் கொள்வதற்கும், மாணவர்கள் மற்றும் கல்விசார் பணியாளர் சபையினை பறிமாறிக் கொள்வதற்கும், கூட்டிணைந்த கருந்தரங்கு / செயலமர்வுகளுக்காக அனுசரணை வழங்குதல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் வவுனியா பல்கலைக்கழக மற்றும் மட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவகம் (Indian Institute of Technology Madras) இடையில் புரிந்தணர்வு உடண்படிக்கை கைச்சாத்திடல்.

XXI. இந்திய கலாச்சார உறவுகள் கவுன்சிலின் பங்களிப்புடன் (Indian Council for Cultural Relations -ICCR) அழைப்பு விடுக்கப்படும் போராசிரியர்களின் சேவையினை ஒப்பந்த அடிப்படைக்கு அமைய வவுனியா பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்காக இந்திய கலாச்சார உறவுகள் கவுனிசில் மற்றும் இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகத்திற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XXII. உயர் கல்வி ஒத்துழைப்பிற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் களனிப் பல்கலைகழகம் மற்றும் கொரிய குடியரசின் தேசிய கொரிய சமுத்திர மற்றும் சமுத்திர பல்கலைக்கழகம் (National Korea Maritime and Ocean University) இடையிலான புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

XXIII. உயர் கல்வி ஒத்துழைப்பிற்கான இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கொழும்புப் பல்கலைகழகம் மற்றும் கொரிய குடியரசின் தேசிய கொரிய சமுத்தில மற்றும் சமுத்திர பல்கலைக்கழகம் (National Korea Maritime and Ocean University) இடையிலான புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

XXIV. உயர் கல்வி ஒத்துழைப்பிற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியத்தின் பர்மின்ஹம் பல்கலைக்கழகம் (The University of Birmingham), ஏடின்பேர்க் பல்கலைக்கழகம் (The University of Edinburgh) மற்றும் லெஸ்டர் பல்கலைக்கழகம் (The University of Leicester) இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

XXV. கல்வி ஒத்துழைப்பினை மேம்படுத்தல், பீடங்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான கல்வி மற்றும் கலாச்சார செயற்பாடுகளை மேம்படுத்தல், ஒத்துழைப்பு ஆராயச்சிகள், கல்விசார் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல் போன்றவற்றை நோக்காக் கொண்டு இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் தாய்லாந்து மஹாமகுட் பௌத்த பல்கலைக்கழகம் (Mahamakut

Buddhist University, Thailand) இடையிலான கல்விசார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பினை கட்டியெழுப்புவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

XXVI. கல்வி, ஆராய்ச்சி மற்றும் சமூக சேவை ஆகிய துறைகள் மூலம் கல்வி ஒத்துழைப்பினை மேம்படுத்தல், கல்வி நிபுணர்களின் மற்றும் விரிவுரையாளர்களின் நிபுணத்துவ அறிவினைப் பெற்றுக் கொள்ளல், விஞ்ஞான ஆயவுகூடம் மற்றும் நூலகங்கள் பௌதீக வளங்களைப் பயன்படுத்தல், சேவைக்காலப் பயிற்சிகள் உட்பட பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் கல்விசார் கருத்தரங்குகள் போன்றவைகள் மூலம் மானிட வள அபிவிருத்தி, பாடவிதான அபிவிருதததி போன்றவற்றை நோக்காகக் கொண்டு இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் மற்றும் இந்தோநேசியாவின் ஜகர்தா நாலந்தா நிறுவனம் (Nalanda Institute, Jakarta, Indonesia) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடல்.

XXVII. பரஸ்பர ரீதியில் இணங்கிய துறைகளில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கு மற்றும் வெளியீட்டினை மேற்கொள்ளல், ஒருங்கிணைந்த கருத்தரங்கு மற்றும் செயலமர்வினை நடாத்துவதற்கும், கல்விசார் பணியாளர் சபை மற்றும் மாணவர் பறிமாற்றல்களுக்கும், கல்வித் தகவல்கள் மற்றும் பொருள்சார் பரிமாற்றல்கள் போன்றவற்றினை நோக்காகக் கொண்டு இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் போலாந்தின் எஸ் ஜீ எச் வோர்சோ பொருளாதார விஞ்ஞான கல்லூரி (SGH WARSAW School of Economics, Poland) இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திடல்.

**4.4 இலங்கை சனநாயக சோசலிச குடிரசின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு / பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் வெளிநாட்டு இராச்சியங்கள் / வெளிநாட்டுப் பல்கலைகழகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பினை நோக்காக் கொண்டு புரிந்துணர்வு உடண்படிக்கை / உடண்படிக்கைகளை எட்டுதல்.**

I. உயர் கல்வி ஒத்துழைப்பிற்காக இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் அவுஸ்திரேலிய கிரபிக் பல்கலைக்கழகம் (Griffith University, Australia) இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

II. உயர் கல்வி ஒத்துழைப்பின் மூலம் சிங்கப்பூர் குடியரசின் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (The National University of Singapore) மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சிற்கு இடையில் புரிந்துணர்வு உடண்படிக்கையினை எட்டுதல்.

III. உயர் கல்வி ஒத்துழைப்பின் ஊடாக ஹங்கேரியாவின் வெளிவிவகார மற்றும் வர்த்தக அமைச்சு (The Ministry of Foreign Affairs and Trade of Hungary) மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சிற்கு இடையிலான Stipendium Hungaricum புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் 2025 – 2027 ஆண்டிற்காக (The University of Leicester) பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை எட்டுதல்.

## 2.1.7. திட்டமிடல் பிரிவு

- உள்நாட்டு வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு உரியதாக 2025 ஆண்டில் காலாண்டிற்கான முன்னேற்ற அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கும் 2025 ஆம் ஆண்டில் நான்கு காலாண்டிற்கான முன்னேற்ற அறிக்கை செயற்பாடு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

- தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டம் உலக வங்கி செயற்திட்டத்திற்கு மற்றும் வடமேல் அபிவிருத்தி செயற்திட்டம், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு உரியதாக செயற்பாட்டுப் பணிகளை முன்னெடுப்பதற்காக இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு மற்றும் வரவு செலவு யோசனைகளுக்கு உரியதாக நடாத்தப்பட்ட செயற்பாட்டுக் குழுக் கூட்டம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு நடாத்தப்பட்டுள்ளது.

| செயற்திட்டம் | கூட்ட எண்ணிக்கை |
|---|---|
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மானிட வள அபிவிருத்தி செயற்திட்டம் (ADB) | 03 |
| கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதார பாதுகாப்பு பீடத்தின் கட்டத்தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டம். | 0 |
| வடமேல் பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி செயற்திட்டம் (WUTDP) | 03 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம். | 02 |
| றுஹூனு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திற்காக 12 மாடிக் கட்டத்தினை நிர்மாணித்தல். | 04 |
| றுஹூனு பல்கலைக்கழகத்தின் சமுத்திர கற்கை மற்றும் சமுத்திர விவகாரம் தொடர்பான அலகினை தாபித்தல். | |
| கறாபிடிய வைத்தியசாலையின் பேராசிரியர் அலகினை தாபிக்கும் செயற்திட்டம். | |
| றுஹூனு பல்கலைக்கழகத்தின் இணைச் சுகாதார பீடத்தினை தாபிக்கும் செயற்திட்டம். | |
| மொத்தம் | 12 |

*அட்டவணை 2.33*

- 2025 ஆம் ஆண்டில் 5 வெளிநாட்டு செயற்திட்டங்கள் மற்றும் 7 வரவு செலவு யோசனை செயற்திட்டங்கள் திட்டமிடல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.
- வரவு செலவு யோசனைகளுக்கு உரியதாக மாதாந்த முன்னேற்ற அறிக்கை தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- 2024 வருடாந்த செயற்சாதனை அறிக்கை மற்றும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு இலங்கைப் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கு 04 கணக்காய்வுகளுக்காக பதில் அனுப்பப்பட்டுள்ளது.
- உயர் கல்வியிற்கான உப குழுவினைப் பிரதிநித்துவப்படுத்தி இறுதி அறிக்கையினைத் தயாரிப்பதற்காக பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- வெளிநாட்டு வழங்களின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்ட யோசனையினை பரிந்துரை செய்து அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

| பல்கலைக்கழகங்கள் | அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | தேசிய திட்டமிடல் அமுலாக்கள் திணைக்களத்தினால் பரிநதுரை செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிதி ரூபா.மி. |
|---|---|---|---|---|
| கேலனியா ப. க. | 1 | 1 | 1 | 23.65 |
| பேராதனை ப. க. | 1 | 1 | 1 | N/A |
| மொத்தம் | | | **2** | **23.65** |

*அட்டவணை 2.34*

### 2.1.8. அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு

- **2025 ஆம் ஆண்டில் பட்டத்தினை வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனம்.**

2025 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் பட்டத்தினை வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டன.

1. இலங்கை இன்ஸ்டியூட் ஒப் டுவரிசம் அண்ட ஹோட்டல் மனேஞ்மன்ட்
2. இலங்கை இன்டியூட் ஒப் டெக்ஸ்டைல் அன்ட் அபரல்.
3. அமெரிக்கன் கொலேஜ் ஒப் ஹயர் எடியுகேசன் (பிரைவட்) லிமிடட்.

இதற்கு அமைய, 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 31 நிறுவனங்கள் பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை, இந் நிறுவனத்தினால் வழங்கப்படும் புதிய 16 பட்டப் பாடநெறிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதற்கு அமைமய 2025 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்தப் பட்டப் பாடநெறிகளின் எண்ணிக்கை 293 ஆகும்.

**பட்டப் பாடநெறியின் எண்ணிக்கை**

| | ஆரம்பப் பட்டம் (Basic Degrees) | பட்டப்படிப்பு டிப்ளோமா (P/G Diploma) | கலைமானி / விஞ்ஞானமானி (Master) | தத்துவமானி (M Phil) | தத்துவ முதுமானி (Ph D) | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2024.12.31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பாடநெறி எண்ணிக்கை | 209 | 15 | 29 | 12 | 12 | 277 |
| 2025.01.01 தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை அங்கிகரிக்கப்பட்ட பட்டப்பாடநெறி எண்ணிக்கை | 15 | 00 | 01 | 00 | 00 | 16 |
| **2025.12.31** ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டப்பாடநெறி | 224 | 15 | 30 | 12 | 12 | 293 |

*அட்டவணை 2.35*

### 01. அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை முன்னெடுத்துச் செல்லுதல்.

பட்டம் வழங்கப்படும் நிறுவனங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் நோக்குடன், இப் பிரிவின் மூலம் அந் நிறுவனங்களின் பட்டப் பாடநெறிகள் மற்றும் மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகளட தொடர்பான தகவல்கள் கொண்ட புள்ளிவிபரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அத் தவல்களை சமகாலப்படுத்துவதும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## 2025 ஆம் ஆண்டிற்கான மாணவர் பதிவுகள் தொடர்பான விபரங்கள்

| | பட்டம் வழங்கும் நிறுவனங்கள் | 2025 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | மொத்த மாணவர் பதிவு 2025 | சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை | 2025 ஆம் ஆண்டில் பட்டம் பெற்றுக் கொண்ட மாணவர் எண்ணிக்கை |
| 01 | அளவை மற்றும் வரைபடமாக்கும் நிறுவனம் (ISM) | 11 | 33 | 0 |
| 02 | இலங்கை இன்ஸ்டியூட் ஒப் இன்போமேசன் டெக்நொலஜி (கரண்ட்) லிமிடட் (SLIIT) | 5898 | 19745 | 3270 |
| 03 | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) | 0 | 48 | 133 |
| 04 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் (NISD) | கிடைக்கவில்லை | | |
| 05 | அக்வைனஸ் கெலேஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ் (AQUINAS) | கிடைக்கவில்லை | | |
| 06 | சவுத் ஏசியன் ஒப் இன்டஸ்டிரீஸ் ஒப் டெக்நொலஜி அன்ட் மெடிசின் (SAITM) (பிரைவட்) லிமிடட். | அமுல்படுத்தப்படவில்லை. | | |
| 07 | நசனல் ஸ்கூல் ஒப் பிஸ்நஸ் மனேஜ்மன்ட் லிமிடட் நிறுவனம் (NSBM) | 1862 | 6550 | 1397 |
| 08 | கொழும்பு இன்டநசனல் நொட்கல் அன்ட் இன்ஜினியரிங் கொலேஜ் (பிரைவட்) லிமிடட் - CINEC | 1594 | 3424 | 697 |
| 09 | இலங்கை இன்டநசனல் புடிஸ்ட் அகடமி (SIBA) | 434 | 1552 | 160 |
| 10 | இலங்கை பட்டய கணக்காளனா் நிறுவகம் (CASL) | 779 | 2050 | 315 |
| 11 | சணச கம்பஸ் லிமிடட் (SANASA) | 0 | 198 | 38 |
| 12 | ஹெரைசன் கொலேஜ் ஒப் பிஸ்நஸ் அன்ட் டெக்நொலஜி (பிரைவட்) லிமிடட். (HORIZON) | 809 | 3044 | 180 |
| 13 | கே.ஐ.யூ. கம்பஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவகம் (KIU) | 4999 | 10260 | 2809 |
| 14 | நாகாநந்த இன்டநசனல் இன்டியூட் பொ புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிரைவட்ட லிமிடட் | 247 | 351 | 03 |
| 15 | ஶ்ரீஇலங்கை டெக்நொலஜி கம்பஸ் பிரைவட் லிமிடட் | 1417 | 7062 | 796 |
| 16 | இலங்கை இன்டியூட் ஒப் நனோ டெக்நொலஜி (பிரைவட்) லிமிடட் (SLINTEC) | கிடைக்கவில்லை | | |
| 17 | சீகீஸ் கம்பஸ் (பிரைவட்) லிமிடட் (SAEGIS) | 162 | 905 | 111 |
| 18 | ரிசொப்ட் மெட்ரோ கம்பஸ் (பிரைவட்) லிமிடட் (ESOFT) | 40 | 279 | 50 |
| 19 | இன்ஸ்டியூட் ஒப் கமெஸ்டிரி சிலோன் நிறுவகம் (ICHEM) | 292 | 292 | 0 |
| 20 | இன்டநசனல் கொலேஜ் ஒப் பிஸ்நஸ் அன்ட் டெக்நொலஜி லிமிடட் ( ICBT) | கிடைக்கவில்லை | | |
| 21 | பெனடிக்ட் XVI கதலிக் இன்டஸ்டியூட் ஒப் ஹயர் எடியுகேசன் (பிரைவட்) (BCI) | 87 | 427 | 48 |
| 22 | ரோயல் இன்டஸ்டியூட் கலம்பு (பிரைவட்) லிமிடட் நிறுவனம் (RIC) | 0 | 11 | 0 |
| 23 | பிஸ்கஸ் மனேஜ்மன்ட் ஸ்கூல் பிரைவட் லிமிடட் (BMS) | கிடைக்கவில்லை | | |
| 24 | இன்டர்நசனல் இன்டஸ்டியூட் ஒப் ஹெல்த் சயன்ஸ் (பிரைவட்) எல்ரிடி | கிடைக்கவில்லை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | லங்கா நிபொன் பிஸ்டெக் இன்ரியூட் (பிரைவட்) லிமிடட் | 43 | 249 | 0 |
| 26 | கேட்வே கொலேஜ் (பிரைவட்) லிமிடட் | 11 | 22 | 0 |
| 27 | லைசியம் கம்பஸ் (பிரைவட்) லிமிடட் | 26 | 19 | 0 |
| 28 | பிரிடிஸ் ஸ்கூல் ஒப் கொமர்ஸ் (பிரைவட்) லிமிடட் | கிடைக்கவில்லை | | |
| 29 | இலங்கை இன்ஸ்டியூட் ஒப் டுவசிம் அன்ட் ஹோட்டல் மனேஜ்மன்ட் | புதிததாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். | | |
| 30 | இலங்கை இன்ரியூட் ஒப் டெக்ஸ்டைல் அன்ட் அபரல் | 14 | 14 | 0 |
| 31 | அமெரிக்கன் கொலேஜ் ஒப் ஹயர் எடியுகேசன் (பிரைவட்) லிமிடட் | புதிதாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். | | |
| | **மொத்தம்** | 11889 | 34396 | 6387 |

*அட்டவணை 2.36*

*மூலம் : உரிய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தகவல்கள்.*

**02. இலங்கையில் உயர் கல்வி நிறுவனங்களில் தரத்தனை சான்றுப்படுத்தல் மற்றும் தராதர அங்கீகார செயற்பாட்டு ஒழுங்குவிதிகளின் முன்னேற்றத்தினை அங்கீகரிக்கும் செயற்பாட்டு ஒழுங்குக் கோவை (SOP)**

பட்டம் வழங்கும் நிறுவனங்களை அங்கீரிப்பதற்காக அங்கீகார செயற்பாட்டு ஒழுங்குக் கோவை (SOP) தயாரிக்கும் தேவை தராதர அங்கீகார மற்றும் தரத்தினை உறுதிப்படுத்துவது தொடர்பான நிலையியற் குழுவினால் (SCAQA) வலியுறுத்தப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25அ பிரிவின் கீழ் உயர் கல்வி நிறுவனம் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கும் செயற்பாட்டு ஒழுங்குகள் மற்றும் ஒப்பளவுகளை உறுதிப்படுத்தலை அங்கீகரிக்கும் செயற்பாட்டு ஒழுங்குகள் (SOP) இன் நோக்கமாகும்.
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம், முதலீட்டு சபை சட்டம் அல்லது உள்நாட்டு பட்டம் வழங்கும் தரத்தினை எதிர்பார்க்கும் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நிலையிற் சபை நிறுவனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கானவும் இவ் விடயப்பரப்பு உரியதாகும்.

**03. கல்வியின் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்காக அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட புதிய முன்னேற்றங்கள்**

**சர்வதேசக் கல்வி (Trans National Education (TNE) கொள்கை**

சர்வதேச மூலோபாயமாக, தற்போதைய உள்ளீட்டில் சர்வதேச கல்வி (TNE) முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச உயர் கல்வி என்பது தாய் நிறுவனத்தினால் நேரடியாக அல்லது சர்வதேச பங்குடமையாளர்களுடன் ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்பட்டுள்ள அமுல்படுத்தப்படும் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் வெளிநாடுகளுக்கு வழங்குவதாக விளக்கப்பட்டுள்ளது. கடந்த தசாப்பதத்திற்குள் இலங்கை TNE வழங்குநர்களின் துரித பரம்பலைக் காண முடிகின்றது. இவ் விநியோகஸ்தர்களில், அநேகமனோர் கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரமாக (கம்பனி பதிவாளர் அல்லது முதலீட்டு சபையுடன்) பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், கல்வி அமைச்சினால் பதிவு செய்தல் அல்லது மேற்பார்வை செய்வதற்காக எந்தவொரு வழங்கும் இல்லை.

இதற்கு அமைய, அமைச்சின் அரச சார்பற்ற உயர்கல்விப் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு TNE பிரிவிற்காக கொள்கையினை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன;

அ. பொருளாதார அபிவிருத்தியிற்கு காரணமாக அமையும் பிரதான பிரிவுகளில் தொழில் இயலுமைகளை விருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தி, இலங்கையில்

இளைஞர் யுவதிகளிற்கு உயர் தரத்திலான உயர் கல்வியிற்கான வாய்ப்பிற்கான பிரவேசத்தினை கிரமமாக விரிவுபடுத்துவதற்காக வசதிகளை வழங்குதல்.

ஆ. அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்ட துறைகளில் விருத்தியிற்காக தேவையான திறமை கொண்ட ஆளனியினை வழங்குவதன் மூலம் நிலையான அபிவிருத்தியிற்கு மற்றும் பொருளாதார அபிவிருத்தியிற்கு உதவிகளை வழங்குதல்.

இ. பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி நோக்கங்களுக்காக வெளிநாடு செல்லும் மாணவர் எண்ணிக்கையினை குறைத்தல் மற்றும் அதன் மூலம் அந்நியநாட்டு செலாவணியினை செலவிடுவதனை குறைத்தல்.

ஈ. இலங்கை அல்லாதவர்களுக்கு சேவை வழங்கும் மற்றும் நாட்டிற்கு குறிப்பிடத்தக்களவு வருமானத்தினை ஈட்டும் உயர் கல்வி மத்திய நிலையமாக இலங்கையினைக் காண்பிக்கக் கூடிய வகையில் சிறந்த முறையில் சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட மூலோபாய மார்க்கத்திற்கு அடித்தளத்தனை இடல்.

## 04. காலத்திற்கு ஏற்றவாறான தபான மீளாய்வுகள் / காலத்திற்கு அமைவான வேலைத்திட்டங்களை மீளாய்விற்கு உட்படுத்தல்.

இவ் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்படட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனம் மற்றும் பட்டங்களின் பண்புசார் தரத்தினை உறதிப்படுத்துவதற்காக, 2014.07.28 திகதி இடம்பெற்ற 15 ஆவது தராதர அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டு நிலையியற் குழு (SCAQA) தீர்மானத்திற்கு அமைய, உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு வெளியிடப்பட்டதன் பின்னர் ஐந்து (05) வருடங்களை பூரணப்படுத்தும் அனைத்து நிறுவனங்கள் மற்றும் பட்ட வேலைத்திட்டங்களுக்கான மீளாய்வுகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது 31 நிறுவனங்கள் பட்டத்தினை வழங்கும் நிறுவனங்களாக அங்கீகிக்கப்பட்டுள்ளதுடன், இந் நிறுவனங்களினால் வழங்கப்படும் 293 பட்டப் பாடநெறிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதியளவில் 20 நிறுவனங்கள் மற்றும் 155 பட்டப் பாடநெறிகள் அடிப்படை அங்கீகாரத்தின் பின்னர் 5 வருடங்களை பூர்த்தி செய்துள்ளதுடன், அதற்கு அமைய ஐந்து வருட மீளாய்விற்கு உட்பட்டுள்ளது.

## 05. மாணவர் ஆய்வு

இலங்கையில் கல்வி அமைச்சின் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவினால் நடாத்தப்படும் பட்டம் வழங்கும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் (DANSHEIs) மாணவர்களுக்கான ஆய்வுகள்.

பட்டம் வழங்கும் நிறுவனமாக அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் (DANSHEIs) மாணவர்களுக்கு அதி சிறந்த கற்கை சூழலை வழங்குவதன் எதிர்பார்ப்புடன் இலங்கையில் கல்வி அமைச்சின் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் மேற்பார்வை அலகினால் இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 06. தராதர மற்றும் தரச் சான்றிதழ் தொடர்பான நிலையியற் குழு (SCAQA) மேற்பார்வை சுற்றறிக்ககை

தராதர மற்றும் தராதர சான்றுப்படுத்தல் தொடர்பான நிலையான குழுவின் (SCAQA) அங்கத்தவர்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் பல்கலைக்கழக சட்டத்தின் 25 அ பிரிவிற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்திற்கு மேற்பார்வை சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

இச் சுற்றுலாவின் நோக்கமாக அமைவது பட்டம் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கும் வசதிகளை பரிசோதனை மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் SCAQA அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**07. உரிய காலப்பகுதியிற்கான வேலைத்திட்ட மீளாய்வுகளுக்கான செயலமர்வினை நடாத்துதல்**

வழிகாட்டல் ஆலோசனைகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் மற்றும் அறிவுறுத்தல்களை மேற்கொள்வதற்காக சுற்றுலா பாடநெறி மீளாய்வுகள் (Periodic programme reviewers) இற்காக ஒழுங்கு செய்யப்படட்ட செயலமர்வு, கௌரவ அமைச்சரின் பங்கேற்புடன் 2025.09.12 ஆம் திகதி சோலிஸ் ஹோட்டலின் (Solis Hotel) வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

**08. பட்டம் வழங்கும் நிறுவனங்களுக்கான செயலமர்வினை நடாத்துதல்**

உயர் கல்விக் கொள்கைத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறுபட்ட வளர்ச்சிகள் தொடர்பாக அறிவுறுத்தல் மற்றும் காலத்திற்கு ஏற்றவாறான வேலைத்திட்ட மீளாய்வுகள் (Periodic programme reviews) தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதனை நோக்காக் கொண்ட செயலமர்வு, 2025 ஒக்டோபர் 03 ஆம் திகதி புறக்கோட்டை சோலிஸ் ஹோட்டலில் (Solis Hotel) நடாத்தப்பட்டது. கல்வியளாலர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தரப்பினர் உட்பட முன்னனி பங்கேற்போர்கள் சுமார் 120 பேர் இவ் வேலைத்திட்டத்திற்காக ஒரு பொது இடத்தில் ஒன்று கூடினர்

**09. பட்டம் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக தற்போது காணப்படும் வழிகாட்டல் ஆலோசனைகளை விருத்தி செய்தல் மற்றும் எல்லையினைத் தாண்டும் கல்வி (Trans National Education - TNE) மேற்பார்வைக்கான வழிகாட்டல் அலோசனைகளை வகுத்தல்.**

அரச சார்பற்ற பல்கலைலக்கழக மேற்பார்வைக்காக பலம்பொருந்திய சட்ட ஒழுங்குகள் மற்றும் கோவைகளை நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், உலகில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு இலங்கையில் பல்கலைக்கழகங்களைத் தாபிக்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதன் நோக்கமாக அமைவது கல்விப் பொதுத்தராதர (உயர்தரத்தில்) சித்தியடைந்தயடைந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்லைக்கழக கல்வியினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டு மாணவர்களை சோத்துக் கொள்வதன் மூலம் அந்நியநாட்டு செலாவணியினை ஊழைப்பதாகும்.

இதற்கான அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்குகள் (SOP) தற்போது தயாரிக்கப்படுவதுடன் அதனை வெளியிடும் செயற்பாடுகள் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளது. அத்துடன், எல்லைப் பிரதேசத்திற்கு அப்பால் செல்லும் கல்வி (Trans National Education - TNE) மேற்பார்வைக்கான கொள்கைப் பத்திரங்கள் (Policy Paper) நிபுணத்துவ குழுவின் மூலம் ஏற்கனவே தயாரிக்கப்படுகின்றன.

**10. உயர் கல்விக் கொள்கைகளை விருத்தி செய்வது தொடர்பான தேசிய குழு (NCHEPD)**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி கௌரவ அமைச்சர் கலாநிதி ஹரினி அமரசூரிய அவர்களின் ஆலோசனைக்கு அமைய இலங்கையில் உயர் கல்வித்துறைக்காக விரிவான தேசிய கொள்கை ஏற்கனவே வகுக்கப்படுகின்றன. இக் கொள்கையின் நோக்கமாக அமைவது உயர் கல்வித்துறை மிகுந்த உள்ளீடு கொண்ட (Inclusive), எதிர்காலத்திற்கு பொருத்தமான (Future-ready) மற்றும் சர்வதேச ரீதியில் போட்டிகரமான துறையாக மாற்றியமைப்பதாகும்.

தற்போதை கொள்கைஅடிப்படையிலான ஆரம்பம், நாட்டின் உயர் கல்வ முறைமையை இவ் விரிவான தேசிய நோக்குடன் சமநிலைப்படுத்துவது எதிர்பார்ப்பாகும். அரசாங்கத்தின் கலவி மூலோபாயத்திலர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இதற்கு அரச பல்கலைக்கழகங்க முறைமையினை நவீனமயப்படுத்தல், பட்டப்பின் பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சியினை பலப்படுத்தல், தொழில் மற்றும் தொலைக் கல்வி ஊடாக கல்வியிற்காக வாய்ப்பிழன விரிவுபடுத்தல் மற்றம் தனியார் துறைக்காக பலம்பொருந்திய மேற்பார்வை பொறிமுறையினை அறிமுகப்படுத்தல் இதில் உள்ளடங்குகின்றது.

இதற்கு அமைய, கல்வி உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி கௌரவ அமைச்சரின் இணக்கத்துடன், புத்திஜீவிகள், நிருவாகிகள் மற்றும் கைத்தொழில் துறையில் ஈடுபடுவோரை பிரதிநித்துவப்படுத்தக்

கூடியவாறு உயர் மட்ட 32 அங்கத்தவர்களை கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அதன் இணை – தலைமைத்துவத்தினை வகிப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தலைவர் பேராசியரியர் கபில செனரத்ன மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் நிலந்தி டி சில்வா ஆகியோர் மூலமாகும். ஊயர் கல்வி கொள்கை அபிவிருத்தி தொடர்பான தேசிய குழுவின் (NCHEPD) முதலாவது கூட்டம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி கொளரவ அமைச்சரின் மற்றும் குழுவின் தலைவர் உட்பட அங்கத்தவர்களின் பங்கேற்புடன் 2025.09.19 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதன் கொள்கை அபிவிருத்தியிற்கான வீதி வரைவு (Road map) தொடர்பான மூல ஆவணம் இணைத் - தலைவர் பேராசிரியர் நிலன்த டி சில்வா அவர்களினால் சமர்பிக்கப்பட்டதுடன், அது கலந்துரையாடலிற்காக திறக்கப்பட்டது.

உயர் கல்வி கொள்கை அபிவிருத்தி தொடர்பான தேசிய குழுவின் (NCHEPD) இரண்டாவது கூட்டம் 2025.10.02 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதற்கு அமைய, அரச துறை, அரச சார்பற்ற துறை, தொழில் கல்வித்துறை மற்றும் உயர் கல்வியிற்கான நிதியத்தினை வழங்கள் ஆகிய துறைகள் தொடர்பாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நான்கு துணைக்குழுக்களை நியமிப்பதற்கும், அதற்காக அங்கத்தவர்களை ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. 2025.10.22 ஆம் திகதி இடம்பெறவுள்ள செயலமர்வில் உரிய தரப்பினர்களின் தேவையான தகவல்களை சேகரிக்கும் பணிகள் இவ் உப குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டது. முதலாவது தரப்பினர்களின் ஆலோசனை அமர்வு (Stakeholder consultation session) 2025.10.22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதற்காக அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனங்களின் (DAIs) புத்திஜீவிகள் மற்றும் நிருவாகிகள், கைத்தொழில் துறையின் நிபுணர்கள், எல்லைப் பகுதியினை தாணிடிச் செல்லும் கல்வி (TNE) வழங்குநர்கள், தொழில் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய உரிய தரப்பினர்களைப் பிரதிநித்துவப்படுத்தி 159 பேர் கலந்து கொண்டனர்.

இவ் அமர்வில், கொள்கைக் கல்வி நிறுவனங்கள் (IPS) இனால் உர்ய கல்வித்துறையின் நிலமைகள் தொடர்பாகவும் தேசிய கல்வி நிறுவகம் (NIE) கலாநிதி தர்சன சமரவீர அவர்களினால் “பொதுக் கல்வி மறுசீரமைப்பு” தொடர்பாக சமர்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து பிரிவு மட்டத்தில் குழு கலந்துரையாடல்கள் நடைபெற்றதுடன், அரச, அரச சார்பற்ற மற்றும் தொழில் கல்வித்துறையினைப் பிரதிநித்துவப்படுத்தி மூன்று சமர்பிப்போர்களினால் இப் கலந்துரையாடல்களில் தீர்மானங்கள் சமர்பிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2025.11.10 ஆம் திகதி உயர் கல்விக் கொளகை அபிவிருத்தி தொடர்பான தேசிய குழுவின் (NCHEPD) அங்கத்தவர்களுக்காக கூட்டம் நடாத்தப்பட்டது. அதன் கொள்கை ஆவணத்தின் வரைவின் மொத்தக் குறிப்பில் அடங்கியுள்ள “வழிகாட்டல் ஆலோசனை மூல அம்சங்கள்” (Guiding principles) மீள தயாரிக்கப்பட வேண்டிய முறைகள் தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

### 2.1.9. வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டத்திற்கு பதிவு செய்வதன் முன்னேற்றம் .

இக் கடன் யோசனைத் திடடத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை கடந்த ஒன்பது மாதங்களில் க.பொ.த. (உயர்தர) சித்தியடைந்த மாணவ மாணவிகள் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

| ஆண்டில் / சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவத் குழு | அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | பட்டப்ப பாடநெறிகளின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | இடையில் கைவிட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கல்வியினைத் தொடரும் மணவர்களின் எண்ணிக்கை | பட்டத்தினை பெற்றுக் கொண்ட மணாவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2017/ முதலாவது மாணவர் குழு | 06 | 26 | 268 | 35 | 06 | 227 |
| 2018/ இரண்டாவது மாணவர் குழு | 08 | 38 | 1,281 | 89 | 175 | 1,017 |
| 2019/ மூன்றாவது மாணவர் குழு | 10 | 50 | 2,064 | 104 | 298 | 1,662 |
| 2020/ நான்காவது மாணவர் குழு | 12 | 69 | 2,114 | 45 | 372 | 1,697 |
| 2021/ ஐந்தாவது மாணவர் குழு | 15 | 95 | 3,665 | 92 | 1,053 | 2,520 |
| 2022/ ஆறாவது மாணவர் குழு | 16 | 101 | 4,443 | 66 | 4,377 | - |
| 2023/ ஏழாவது மாணவர் குழு | 17 | 93 | 3,534 | - | 3,534 | |
| 2024/ எட்டாவது மாணவர் குழு | 18 | 110 | 2,866 | - | 2,866 | - |
| 2025/ ஒன்பதாவது மாணவர் குழு | 16 | 125 | 2927 | - | 2,927 | - |
| மொத்தம் | | | 23,162 | 431 | 15,608 | 7,123 |

*2.37 அட்டவணை*

முதலாவது குழு (Intakes) மற்றும் அதன் கீழ் உள்ளடங்கும் மாணவர்களின் 7,123 மாணவர்கள் வெற்றிகரமாக தமது பட்டத்தினை பூர்த்தி செய்து கொண்டனர்.

### 3. பட்டம் வழங்கும் நிறுவனங்கள்

தற்போது பதினைந்தாயிரத்து அறுநூற'று எட்டு (15,608) கீழ் குறிப்பிப்பட்ட பட்டத்தினை வழங்கும் 18 நிறுவனங்களில் கற்கை செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

i. இலங்கை இன்ஸ்டியூட் ஒப் இன்பொமேசன் டெக்நெலஜி (கரண்ட்) லிமிடட்ட - -SLIIT
ii. நுசனல் ஸ்கூல் ஒப் பிஸ்நஸ் மனேஜ்மன்ட் லிமிடட - NSBM

iii. சினெக் கம்பஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் - CINEC
iv. இலங்கை இலங்கை இன்டநசனல் பூடிஸ்ட் அகடமி அகடமி நிறுவனம் - SIBA
v. இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனம் - ICASL
vi. சணச கம்பஸ் லிமிடட் நிறுவனம் - SANASA
vii. ஹொரைசன் கொலேஜ் ஒப் பிஸ்நஸ் அன்ட் டெக்னொலஜி (பிரைவட்) லிமிடட் - HORIZON
viii. கே.யூ.ஐ. கம்பஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் - KIU
ix. இலங்கை டெக்நொலஜி கம்பஸ் பிரைவட் லிமிடட் நிறுவனம் - SLTC
x. சீகீஸ் கம்பஸ் (பிரைவட்) லிமிடட் - - SAEGIS
xi. ஈசொப்ட் யுனி (பிரைவட்) லிமிடட் - ESOFT
xii. அக்வைநாஸ் கொலேஜ் ஒப் ஹய ஸ்டடிஸ் - AQUINAS
xiii. இன்ஸ்ரிடியூட்ட ஒப் கெமிஸ்ட்ரி சிலோன் - ICHEM
xiv. இன்டநசனல் கொலேஜ் ஒப் பிஸ்நஸ் அன்ட் டெக்நொலஜி லிமிடட் - ICBT
xv. பெனடிக்ட் XVI கதலிக் இனஸ்ரிடியூட் ஒப் ஹயர் எடுவகேசன்
xvi. ரோயல் இன்ஸ்ரிடியூட் ஒப் கலம்பு லிமிடட் - RIC
xvii. நூகாநந்த இன்டநசனல் இன்ரிடியூட் பொ புடிஸ்ட் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் (NIIBS)
xviii. பிஸ்னஸ் மனேஜ்மன்ட் ஸ்கூல் பிரைவட் லிமிடட் நிறுவனம் – BMS

**2025 ஆம் ஆண்டில் ஒன்பதாவது மாணவர் குழுவினை சேர்த்துக் கொள்ளல்.**

2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர் தர) பரீட்சைக்கு தோற்றிய அபேட்சகர்களில் 9 ஆவது குழு (9th Intake) இற்காக விண்ணப்பங்கள் கோரும் செயற்பாடுகள் 2025 ஜனவரி 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மொத்தமாக 10,101 விண்ணப்படிவங்கள் கிடைத்தன. தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை இணையத்தளம் ஊடாக (Online) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.
தேர்ந்தெடுக்கும் செயற்பாடுகளின் பின்னர், விண்ணப்பதாரர்களில் 4,454 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அதில் 2,927 மாணவர்கள் பட்டம் வழங்கும் 16 நிறுவனங்களில் பதிவு செய்து (Enrolled) கற்கை நெறிகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

**9 ஆவது குழுவினை தேர்ந்தெடுப்பதற்காக ஒன்லைன் முறையில் நேர்முகப் பரீட்சை நடாத்தல்.**
இணையவழி




**அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் 9 ஆவது குழவினை பதிவு செய்தல்.**




**2024 ஆம் ஆண்டில் 10 ஆவது குழுவினை சேர்த்துக் கொள்ளல்.**

2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர பத்திர (உய்தர) பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 10 ஆவது குழு (10th intake) சேர்த்துக் கொள்வதற்கான அடிப்படை செயற்பாடுகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆட்சோப்பின் போது புதிய இரண்டு நிறுவனங்கள் வேலைத்திட்டத்தில் இணைந்து கொண்டன.

- லைசியம் கம்பஸ் (பிரைவட்) லிமிடட்
- கேட்வே கொலேஜ் (பிரைவட்)

10 ஆவது குழுவிற்காக விண்ணப்பங்களை கோருதல் 2025 நவம்பர் 01 ஆம் திகதி ஒன்லைன் முறையில் மேற்கொள்ளப்பட்டது. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி ஆரம்பத்தில் 2025 நவம்பர் 30 ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், உயர்தரப் பரீட்சை நேரசூசி மற்றும் “திட்வா” (Ditwah) அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சீரற்ற காலநிலையினை கருத்திற் கொண்டு அத் திகதி 2025 டிசம்பர் 15 வரை நீடிக்கப்பட்டது.

இறுதித் தினமன்று மொத்த விண்ணப்பப்படிவங்கள் 15,075 எண்ணிக்கை கிடைக்கப் பெற்றது.

**நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை.**

புத்திரிகை விளம்பரம், விஷேட கட்டுரைகள், MS Teams தொழில்நுட்பம் ஊடாக நடாத்தப்பட்ட இணையத்தள அறிவுறுத்தல் அமர்வு, அமைச்சின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக செயற்பாடுகள் உட்பட அச்சு மற்றும் இலத்தரணியல் ஊடகங்களின் சேர்வை ஊடாக வட்டியற்ற மாணவர் கடன் யோசனைத் திட்டம் தொடர்பாக பொது மக்களின் விளக்கத்தினை மேம்படுத்தல்.

பிரதான செயற்பாடுகளில் கீழ் குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடங்கியுள்ளன:

- 12 மாவட்டங்கள் ஊடாக 18 அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- கொழும்பு மற்றும் களுத்துரை பிரதேச செயலக அலுவலகங்களில் நடாத்தப்பட்ட தொழில்சார் வழிகாட்டல் ஆலோசனை கண்காட்சி (Career fairs) (2) இரண்டிற்காக பங்கேற்றல்.
- பிரதேச செயலக அலுவலகத்திற்கு ஏழுநூற்று ஐம்பது (750) சுவரொட்டிகளை விநியோகித்தல்.
- முன்னனி சமூக ஊடக வயமைப்பின் ஊடாக இலத்தரணியல் பத்திரம் (E-Flyers) பிரச்சாரம் செய்தல்.

- YouTube ஊடாக அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை வெளியிடல்.
- Mobitel, Hutch மற்றும் Dialog தொடர்புசாதன வலயமைப்புடன் தொடர்புபட்ட குறுஞ் செய்தி மூலம் அறிவுறுத்தல் செயற்பாட்டினை அமுல்படுத்தல்.






மாணவர் கடன் பிரிவினால் நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள்

**1. நடாத்தப்பட்ட மாணவர் மேற்பார்வை வேலைத்திட்டம்**

மாணவர் கடன் பிரிவினால் 5, 6, 7 மற்றும் 8 ஆகிய பிரிவுகளில் (Intakes) மாணவர்களை இலக்காக் கொண்டு இணையத்தளம் ஊடாக ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இதன் போது அந்தந்த நிறுவனத்திற்கு உரியதாக மேற்பார்வை அறிக்கையினை தயாரித்து உரிய பட்டத்தினை வழங்கும் நிறுவனத்திற்கு அனுப்பட்டது. இதன் மூலம் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கும், மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், இவ் வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வியின் மொத்த பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டன.

**2. நிதி முன்னேற்றங்கள்**

